Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

லர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 16 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 17 (01.11.2004) திங்கட்கிழமை இதழ்: 32

இணைந்து விட்டீர்களா?
நிலவு .com in
யாழ் Online
275, யாழ். வீதி,
மானிப்பாய்.
T.P.0777 740413

## ஒஸ்லோ பிரகடனம்' ஏதுமில்லை அது பத்திரிகை அறிக்கை மட்டுமே!

### நோர்வே தூதரக அதிகாரி அறிவிப்பு

(கொழும்பு)

2002 ஆம் ஆண்டு நோர்வேயின்
ாட்டில் இலங்கை அரசுக்கும்
தலைப் புலிகளுக்கும் இடை
ஒஸ்லோவில் நடைபெற்ற
ாட்டின் முடிவில் நோர்வே அர
கத்தால் வெளியிடப்பட்டது பத்
கை அறிக்கையே தவிர பிரகட
அல்ல என்று கொழும்பிலுள்ள
ர்வே தூதரகம் தெரிவித்துள்
.

நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளரான ரொம்நப்ஸ் கொக் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையின் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் அனுசரணையாளராக உள்ள நோர்வே அரசாங்கம் - இலங்கை அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் மிக நீண்ட கலந்துரையாடல்களை நடத்திய பின்னரே இந்த பத்திரிகை அறிக்கையை வெளியிட்டது.

எவ்வாறாயினும் இந்த அறிக்கையில் விடுதலைப் புலிகள் தமது தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட வேண்டுமென எந்தவிதத்திலும் கூற வில்லை. இந்த அறிக்கை - ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையில் தீர்வைக்காண வேண்டுமென்றே கூறுகிறது.

2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஒஸ்லோவில் நடந்த மாநாட்டில் இலங்கை அரசதரப்பில் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி அர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக்கில் கடத்தப்பட்ட சாரதியை விடுவிக்குமாறு மனைவி கோரிக்கை



பிள்ளைகளுடன் மனைவி



(கொழும்பு)

ஈராக்கில் கடத்தப்பட்டுள்ள இலங்கையரை விடுவிக்குமாறு அவரது மனைவி ஈராக்கியத் தீவிரவாதிகளுக்கு உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையீடு செய்யவேண்டுமாம்!

### துடெல்கி மாநாட்டில் வலியுறுத்து

(புதுடெல்கி)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா மீளவும் தலையிடு
ன் மூலமே இந்தப் பிரச்சினையில் தற்போது பங்குவகிக்கும் விடு
லைப் புலிகளையும் அதன் தலைவரையும் தனிமைப்படுத்த முடியு
ன - இந்தியத் தலைநகர் புதுடெல்கியில் சுப்பிரமணிய சுவாமி
லைமையில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் வலியுறுத்தப்பட்ட
கத் தெரியவருகிறது.

நேற்று நடைபெற்ற இந்த மாநாட்டில் ஈழ அகதிகள் புனர்வாழ்வு
மைப்பு, ஈ.பி.டி.பி., இனஅழிப்பிலிருந்து தமிழர்களைப் பாதுகாக்கும் கட்சி ஆகியவற்றிலிருந்து எஸ்.பி.சந்திரகாசன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் மற்றும் ஏசியன் ஏஜ் பிரதம ஆசிரியர் எம்.ஜே. அக்பர், இந்து பத்திரிகை ஆசிரியர் ராம், முன்னாள் வெளியுறவுச் செயலர் சல்மான் ஹைதர், சுப்பிர மணியசுவாமி, முன்னாள் சி.பி.ஐ. இயக்குநரும் ராஜீவ்காந்தி கொலை வழக்கின் விசேட விசாரணைப் பிரிவின் அதிகாரியுமான டி.ஆர்.கார்த்திகேயன் ஆகியோரும் கலந்துகொண்டனர். இந்த மாநாட்டில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் சந்திரசேகர் கலந்துகொள்வதாக இருந்தாலும் சுகவீனம் காரணமாக அவர் கலந்துகொள்ளவில்லை. (12 ஆம் பக்கம் பார்க்க)

### டன்பாடு தொடர்ந்து மீறப்பட்டால்

## காத்தான்குடியில் பதற்றம்

டன்பாடு தொடர்ந்து மீறப்பட்டால்

## ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. தனித்துப்போட்டியிடுவதற்கு முடிவு!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தம் டன் செய்துகொண்ட உடன்பாட் க்கு மாறாக ஜனாதிபதி சந்திரிகா ந்துகொள்வதால் - எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது சார் ல் வேட்பாளர் ஒருவரை தேர்த லில் நிறுத்துவதென ஜே.வி.பி. தீர் மானித்துள்ளது.

ஜனாதிபதிக்கும் ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணி அரசாங் கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி. பிக்குமிடையில் நிலவும் முறுகல் நிலை தீவிரமடைந்து வருகின்றது.

ஜே.வி.பியைச் சேர்ந்த அமைச் சர்களுள் ஒருவரான அனுரகுமார திஸநாயக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்றுமுன்தினம் கடுமையான விமர்சனங்களுடன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். இந்தக் கடிதத்தில் ஜனாதிபதியின் அமைச்சரவை உறுப்பினர்களை ஐக்கிய தேசிய கட்சியின் ஒற்றர் கள் என அவர் தெரிவித்தார். தமது விவசாய அமைச்சில் உரிய நிதியமைப்புகள் பேணப்படவில்லை எனக்கூறி, ஜனாதிபதி அமைச்சர வையில் சமர்ப்பித்த அறிக்கையின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# காத்தான்குடியில் பதற்றம் இரவு ஊரடங்கு பிறப்பிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் காத் தான்குடியில் நேற்றுப் பிற்பகல் ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து - நேற்றிரவு 7 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது.

இந்த ஊரடங்குச் சட்டம் இன்று அதிகாலை 5 மணி வரை அமு லில் இருக்கும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் காத்தான்குடி யில் இடம்பெற்ற வன்முறைச் சம் பவங்களின்போது புதிதாக நிர் மாணிக்கப்பட்டு வரும் பள்ளிவாச லொன்றும், இரண்டு மத்தரசாக்களும் சேதமாக்கப்பட்டு தீ வைக்கப்பட் டன.

முஸ்லிம்களை பெரும்பான்மை யாகக் கொண்ட இந்தப் பிரதேசத் தில் இஸ்லாமிய மதக்கொள்கை கள் மற்றும் கோட்பாடுகள் தொடர் பான முரண்பாடுகளின் எதிரொலி யாகவே இந்த வன்முறைகள் இடம் பெற்றுள்ளன.

ஜமியத்துல் உலமா சபையின் கோட்பாடுகளின் அடிப்படையில் மதத்தைப் பின்பற்றும் ஒருவர் மாற்றுப் பிரிவினரால் கடத்தப்பட்ட தாக வெளியான வதந்தி காரண மாகவே இந்த வன்முறைகள் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. நூற் றுக்கும் மேற்பட்டோர் தடிகள், பொல் லுகள் சகிதம் இந்த வன்முறையில் ஈடுபட்டனர்

மருதமுனை வாசியொருவரால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்!

## பாதுகாப்புச் செயலர் சிறில் ஹேரத் தெரிவிப்பு

இந்திய - இலங்கை பாது காப்புக் கூட்டு ஒப்பந்தம் எதிர்வரும் இரண்டு வாரங்களில் கைச்சாத் திடப்படும் என பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இருதரப்பினரும் இந்தப் பாது காப்பு கூட்டு ஒப்பந்தத்தின் வரைபு தொடர்பாக இறுதி முடிவுகளை எடுத்துள்ளனர்.

தற்போது இந்தப் பாதுகாப்பு கூட்டு ஒப்பந்த வரைபு அமைச்சர வையின் அங்கீகாரத்திற்காக முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் -

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

## உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில்
# 2005 ஆம் கல்வியாண்டுக்குரிய விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2005ஆம் கல்வியாண்டுக்கு மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக உயர் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் ரி.இராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் 2005ஆம் ஆண்டிற்கு உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா, தகவல் தொழிநுட்ப டிப்ளோமா, தேசிய வியாபாரக்கல்வி டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பலாலி வீதியில் அமைந்துள்ள உயர் தொழிநுட்ப நிறுவன அலுவலகத்தில்அலுவலக நேரத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என நிறுவன இயக்குநர் ரி.இராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## முச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன

சமூக நலத்துறைத் திணைக்களத்தினால் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஊனமுற்றோருக்காக நான்கு முச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு சமூக நலத்துறைத் திணைக்களத்திடம் பெறப்பட்ட 4 முச்சக்கர வண்டிகளும் தெரிவு செய்யப்பட்டோரிடம் கையளிக்கப் படவுள்ளதாக பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.வீரசிங்கம் தெரிவித்தார். (25)

# வட்டுக்கோட்டையில் கடையுடைத்துத் திருட்டு

வட்டுக்கோட்டையில் மாவடிச் சந்திக்கு அருகில் உள்ள இரு வியாபார நிலையங்கள் கடந்த வியாழக்கிழமை உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் குறிப்பிட்ட இரு அழகு சாதன வியாபார நிலையங்களுக்கு ஹன்ரர் வாகனம் ஒன்றில் வந்த கொள்ளைக் குழு ஒன்று ஒரு கடையை உடைத்து பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடிவிட்டு இன்னொரு கடைக்குள் நுழைந்து பொருட்களை திருட முற்பட்டபோது வீதியால் வேறு சில வாகனங்கள் வரவே தாம் திருடிய பொருட்களைக கொண்டு திருடர்கள் தப்பியோடி விட்டனர்.

முன்பும் இந்த வியாபார நிலையங்களில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்தத் திருட்டுத் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (207)

# பேரூந்து தரிப்பிடமின்றி பயணிகள் சிரமம்

இருபாலைச் சந்தியை அண்டிய பகுதியில் பேரூந்து தரிப்பு நிலையம் இன்மையால் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் பயணிகள் மழைகாலங்களில் சந்திப்பகுதியில் உள்ள ப.நோ.கூ சங்கம், கடைகளின் வாசல்களில் பேருந்துக்காக காத்திருக்கும் நிலை காணப்படுகிறது.

இந்தச் சந்தியின் வீதியின் இரு பகுதிகளிலும் தரிப்பிட நிலையம் இல்லாது "தரிப்பிட குறிகாட்டி" மட்டுமே நாட்டப்பட்டுள்ளது. இதனால பிரயாணிகள் கடைகளின் முகப்புக் களையே தரிப்பு நிலையங்களாக பயன்படுத்துகின்றனர்.

மேற்படி சந்தித்தரிப்பினை, கோபபாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர்கள், கல்வியியற் கல்லூரி மாணவர்கள், ஏனைய பல பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகள் எனப் பெருமளவானோர் பயனபடுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (90)

# முதியோர் இல்லத்திற்கு அத்தியட்சகர் நியமனம்

(கைதடி)

கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகராகக் கடமையாற்றிய வி.சிவநேசன் ஓய்வு பெற்றதையடுத்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிரேஷ்ட சமூகசேவை உத்தியோகஸ்தர் செ.யோகானந்தராசா முதியோர் இல்ல அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பேராதனைப் பல்கலைக் கழக கலைப்பட்டதாரியும் முன்னாள் யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகஸ்தராகவும், தெல்லிப்பளை, நல்லூர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகங்களில் சமூகசேவை உத்தியோகஸ்தராகவும் கடமையாற்றியவராவார்.

அத்துடன் சுன்னாகம் அரசசார்பற்ற பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதியாக இருந்து சமூக, சமயப் பணிகளையும் ஆற்றிவந்துள்ளார்.

## நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் வாள், கத்தியுடன் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஐந்து நபர்கள் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் வாள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் நடமாடிய ஐந்து நபர்களை கைது செய்த பொலிஸார் அந்தப் பகுதியில் நடைபெறவிருந்த கோஷ்டி மோதல் ஒன்றை தடுத்தனர்.

கைது செய்யப்பட்ட ஐந்து நபர்களும் ஐந்து சந்தி கிராம சேவகர் மூலம் கேட்டுக்கொண்டதற்கு அமைய பிணையில் விடுவிக்கப்பட்டு இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்

## சிறு விளம்பரம்


**இனிப்புவகை தயாரிக்க பெண் தொழிலாளர் தேவை**

இனிப்புவகை, கச்சான் அல்வா, மிக்சர் என்பன தயாரிக்க அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். பாரதி சிறுகைத் தொழில் நிலையம், இல.19, சம்பியன்லேன், கொக்குவில் (972)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

சரத்குமார், விஜயகுமார், ஆனந்தபாபு, மஞ்சுளா நடிப்பில

சேரன் பாண்டியன் (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

DARE DRAVIN

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.45, (பு.நே)

(சி-2723)

**நாகம்ஸ்** சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான



ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் நடித்த (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்.

3 ஆவது ஜனத்திரள் வாரம்

இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த

7/G ரெயின்போ காலனி

இது ஒரு உண்மைக் கதை

பு.நே 10.30, 2.30,6.30,9.30 மட்டும்

ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்


## வீரச்சாவு அறிவித்தல்



| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 09 - 10 - 1974 | 27 - 06 - 1997 |

# மேஜர் திருமாறன் / ஜீவா

(கிளறன்ஸ் - மேரிகிளமென்ற் / ஜூலன்)

குருநகர் யாழ்ப்பாணத்தைச் சொந்த முகவரியாகக் கொண்ட கி.மேரிகிளமென்ற் (மேஜர். திருமாறன் / ஜீவா) அவர்கள் 27.06.1997 அன்று திருகோணமலைக் கடற்பரப்பில் ஏற்பட்ட நேரடி மோதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவர் ஜோசப் கிளறன்ஸ் - லீலாவதி தம்பதிகளின் செல்வ மகனும், கி.மேரி கிளிஸ்ரஸ் - (கொலின்ஸ்) மாவீரன் கப்டன் இசையழகன், கி.மேரி கலிஸ்ரஸ், கி.மேரி ஜெமாலினி, கி.மேரி றீனா லோஜினி, கி.மேரி கிளைவின் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். இவரது திருவுருவப்படம் நாளை பி.ப. 5.00 மணிக்கு கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச்செல்லப்பட்டு பூரண இராணுவ மரியாதைகளுடன் நினைவுக் கல் திரைநீக்கம் செய்து வைக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்

(973)


# விற்பனைக்கு

எம்மிடம் ஆலயங்கள், அன்னதான மண்டபங்கள், திருமண மண்டபங்களுக்குத் தேவையான நிலத்தைச் சுத்தம் செய்கின்ற பிலிப்பர் மெசின் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :-
**தில்லையம்பதி மோட்டோர்ஸ்**
இலக்கம்- 236,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/3301) T.P :- 222 5710



## யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - (வரையுள்ளது)

# பதவிவெற்றிடம்

(லொறிச்சாரதி - தற்காலிகம்)

மேற்பதவிக்கு விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பான தகைமைகள், நிபந்தனைகள் பற்றிய விபரங்களையும் ரூ 10.00 செலுத்தி விண்ணப்ப படிவங்களையும் சமாச பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசித் திகதி 10.11.2004.

தலைவர்
யாழ்.மா.வி.நு.கூ.ச.சமாசம்.

111. பிரதானவீதி.
யாழ்ப்பாணம்.
01.11.2004

(C/3298)



## யாழ்.மாவட்டத்தில்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
தமிழ் மாணவர் ஒன்றியம் ~ யாழ். மாவட்ட வலயக் கல்விப் பணிமனைகளின் இணைந்த ஆதரவுடனும்,

## கிளிநொச்சி மாவட்டத்தில்

தமிழ் மாணவர் ஒன்றியம் ~ கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை ஆகியவற்றின் இணைந்த ஆதரவுடன்

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

க.பொ.த. (சா/ த) - 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை (பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும்) யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் **இலவசமாக** நடாத்த உள்ளது.

மேலதிக விபரங்கள் வெகு விரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்

பாடசாலை பரீட்சார்த்திகளும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இக் கருத்தரங்கில் பங்குபற்றலாம்

**யாழ்.மாவட்டத்துக்கான இணை அனுசரணை**

45 வருடகாலசேவையில் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ் 212, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.

BOC தேசத்தின் வங்கியாளர் இலங்கை வங்கியின் 18 plus இளம்பருவத்தினருக்கு அன்புடன்....

SICS கணினி சேவைகள் இல.125A ,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எங்களின் நோக்கம், உங்களின் தொழில் நுட்பமுன்னேற்றம்.

COMMERCIAL BANK Our Interest Is In You

UNIT 347, K.K.S. Road, Jaffna

Global Info IDM (PVT) LTD., Authorized ICT Education JAFFNA CENTER IDM 451, K.K.S ROAD, JAFFNA

Softview Computer College 43, Arasady Road,Thaddatheru Junction, Jaffna

S.T.P 73, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

சொலெக்ஸ் பல்முக்கு கண்ணாடியகம 516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம 302, கே.கே.எஸ் வீத', யாழ்ப்பாணம்.

IIS 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 2831

# சிங்களவர்களின் பிணக்குவியல் மீதுதான் தமிழர்களுக்கு இடைக்கால நிர்வாகமாம்!

## எல்லே குணவன்ச தேரர் எச்சரிக்கிறார்

**விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்காது. அவ்வாறு முன்னெடுத்தால் அதற்கு எதிராக நாம் போராடுவோம் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரித்துள்ளது.**

அண்மையில் இரத்தினபுரி மாநகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற இந்த இயக்கத்தின் 15 ஆவது பிராந்திய மாநாட்டில் கலந்துகொண்டு, உரையாற்றிய மேற்படி இயக்கத்தின் இணைத் தலைவர் எல்லே குணவன்ச தேரர் கருத்துத் தெரிவிக்கையில் -

தென்பகுதியிலுள்ள எந்தவொரு அரசியல் கட்சியும் இடைக்கால நிர்வாக சபையொன்றை அங்கீகரிக்கக்கூடாது. அவ்வாறு எவரேனும் இடைக்கால நிர்வாக சபையை வழங்க முயற்சித்தால், அது எமது மக்களின் பிணக்குவியல்களின் மீது ஏறிச்சென்றே வழங்கநேரிடும்.

இடைக்கால நிர்வாகசபை நாடு இரண்டாகத் துண்டாடப்படுவதற்கான அடையாளமாகும்.

எமது நாட்டின் வளங்கள் யாவும் வெளிநாட்டுக்குத் தாரை வார்க்கப்பட்டுவிட்டது. வெளிநாட்டினா இலங்கையிலுள்ள எந்தவொரு நிலப்பகுதியையும் அவர்கள் நினைத்த நேரத்தில், சொந்தமாகக் குறைந்தவிலையில் கொள்வனவு செய்யத்தக்கவாறு, ஐக்கிய தேசியக் கட்சி சட்டத்தை இலகுபடுத்தியிருக்கிறது. இதனை நாம் அன்று தொட்டுக் கடுமையாக எதிர்த்து வருகிறோம்.

நாம் இந்தத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தை உருவாக்கியமைக்குக் காரணம் - ஐக்கிய தேசியக் கட்சி சமாதானம் என்ற போர்வையில் புலிகளுக்கு இடைக்கால நிரவாக சபையை வழங்கி, நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்த முயற்சி செய்தமையேயாகும்.

"சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். ஆனால் இடைக்கால நிர்வாக சபை என்ற புலிகளின் நிபந்தனை அவசியமற்றது. இன்று இடைக்கால நிர்வாகசபையைக் கேட்போர், நாளைக்குத் தனிநாடு ஒன்றைக் கேட்கமாட்டார்களா? இதற்கு என்ன உத்தரவாதம்.

நாம் எமது நாட்டைப் பயங்கரவாதிகள், வெளிநாட்டவர்கள் ஆகியோரிடமிருந்து மட்டுமல்லாமல், நாட்டை ஆளும் தலைவர்களிடமிருந்தும் காப்பாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்க காலத்தில் பௌத்த கலாசாரத்தை ஒரு துளியேனும் மதிக்காத தலைவர்களே நாட்டை ஆட்சி செய்தனர். ரணில் விக்கிரமசிங்க பௌத்த கலாசாரத்தை ஒரு காலமும் பின்பற்றாதவர். விகாரைக்குப் பூத்தட்டுக் கொண்டுசெல்வதற்குப் பதிலாக, மலர்ச்செண்டு தான் கொண்டுசெல்வார். இவரிடம் எப்படி எமது கலாசாரத்தைப் பேணுமாறு கேட்கமுடியும்? இவர்கள் வெளிநாட்டுக் கலாசாரத்துக்கு மட்டுமன்றி, வெளிநாட்டுத் தலைவர்களுக்கும் அடிமையானவர்கள். இதனால் எமது நாட்டின் கலாசாரம் சீரழிந்து, சிதைந்துவிட்டது.

துப்பாக்கி வைத்திருப்பவன் எதையும் தரச்சொல்லிக் கேட்பான். பணம், நகை இவற்றைக் கொடுக்கலாம். ஆனால், எமது தாயைக் கேட்டால் கொடுக்கமுடியுமா? ஆனால், ரணில் விக்கிரமசிங்க தலைமைத்துவம் அதையும் கொடுக்கமுற்பட்ட நிலையில்தான் எமது இயக்கம் ஆரம்பமானது.

கல்வித் திட்டத்தில் எமது கலாசாரத்தையோ, வரலாற்றையோ கடந்த 18 வருடகாலத்தில் உள்ளடக்க வில்லை. ஆனால் நாம் இன்று அதனைச் செய்துள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைகள் வெளியேற்றப்பட்டால் தான் அந்தக் கட்சிக்கு விடிவு காலம் ஏற்படும். ஏனெனில் இந்தக் கட்சியின் தலைமைப்பீடம் கேள்விக் குறியாகவே உள்ளது.

திலக் கருணாரட்ணவும் இன்று அவர்களுடன் சேர்ந்துள்ளார். முன்பு அந்தக் கட்சியில் இருந்த திலக் மாரப்பன வெளியேற்றப்பட்டுள்ளார். இவ்ர்கள் இருவரையும் நம்பிய மக்கள், தேரர்கள் நடுத் தெருவில் கைவிடப்பட்டார்கள்.

'தர்ம ராஜ்ஜியத்தை' உருவாக்கப் போவதாகக் கூறிக் கொண்டு, நாடாளுமன்றம் சென்றவர்கள் இன்று பிராடோ சொகுசு வாகன இராஜ்ஜியத்தை உருவாக்கி விட்டனர். இதனூடாகப் பல சலுகைகளை அனுபவிக்கின்றனர்.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவால், கடந்த காலத்தில் புலிகளின் தாக்குதலில் இருந்து பௌத்த பிக்குகள் ஓடித் தப்புவதற்கு அபாய ஒலிஹேர்ன் வழங்கப்பட்டது. கிறிஸ்தவ சமயத் துறவிகளுக்குக் குண்டு துளைக்காத கண்ணாடி அறைகள் வழங்கப்பட்டன.

இவைகள் அனைத்தும் கடந்த காலத் தவறுகள். இன்றைக்கு எமது பிரதான நோக்கம், இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தைச் சரியான வழியில் கொண்டு செல்வதேயாகும்.

எனினும் இந்தக் கட்சியால், புலிகளின் கோரிக்கைப்படி இடைக்கால நிர்வாகசபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படுமாயின், நாம் அதற்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்போம் என அவர் மேலும் கூறினார்.

## கடத்தப்பட்ட தமிழரை விடுவிப்பதற்கு முயற்சி

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இலங்கையரான தினேஸ் தர்மேந்திரா இராஜரத்தினத்தை விடுவிப்பதற்கான அனைத்து முயற்சி களையும் தமது அமைச்சு மேற்கொண்டு வருவதாகப் பிரதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட நபர் - தனது சுய விருப்பத்தின் பேரில் குவைத்திலிருந்து ஈராக்குக்கு அனுப்பப்பட்டாரா அல்லது தொழில் நிறுவனத்தின் கட்டாயத்தின் பேரில் அனுப்பிவைக்கப்பட்டாரா என்பன குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகிறது.

இவரை இராஜதந்திர ரீதியில் அல்லது மாற்று வழிகளில் என்றாலும் சரி, விடுவிப்பதற்கான முயற்சிகளில் மத்திய கிழக்கிலுள்ள ஏனைய இலங்கை இராஜதந்திரிகள் ஊடாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஊழியர் தொழிற்சங்கங்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

### 3 ஆம் திகதி நடத்துவதற்குத் திட்டம்

அரசாங்க ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் எதிர்வரும் 3 ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளன.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவுக்கு அருகில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

அரசாங்கம் தாம் உறுதியளித்தபடி அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் இந்த ஆர்ப்பாட்ட ஏற்பாட்டாளர்கள் - அரசாங்க ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வரை சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையின் மத்தியில், தனியார்துறை ஊழியர்களுக்கும் சம் பள உயர்வு வழக்கப்படவேண்டும் என்ற நோக்கத்தை முன்வைத்து, அன்றைய தினம் தனியார் ஊழியர்களும் தமது ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)



திருகோணமலைக்கு நேற்று முன்தினம் விஜயம் ஒன்றை மேற்கொண்ட ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி முஸ்லிம் பிரதிநிதிகளை சந்தித்துப் பேச்சு நடத்துகிறார்.

## முஸ்லிம் காங்கிரஸ் தலைமையிலிருந்து ரவூப் ஹக்கீம் விலக வேண்டுமாம்!

### புதிய முஸ்லிம் அமைச்சர்கள் கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைமைப் பதவியிலிருந்து, ரவூப் ஹக்கீமை அகற்றி, பிரிந்து சென்ற அனைவரையும் ஒன்றிணைப்பதே தமது இலக்கு என, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழு கூறுகிறது.

மாற்றுக் குழுவைச் சேர்ந்த 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் அமைச்சர்களாக பதவியேற்ற பின்பு ஏற்பாடு செய்த பத்திரிகையாளர் மகாநாட்டில் இநதக் கோரிக்கை வெளியிடப்பட்டது.

குறிப்பிட்ட அமைச்சர்கள் கலந்துகொண்ட இந்த மகாநாட்டில் மாற்றுக் குழுவின் பொதுச் செயலாளரான சட்டத்தரணி என்.எம். சாகீத் தெரிவிக்கையில்,

ரவூப் ஹக்கீமின் தன்னிச்சையான போக்குக் காரணமாகவே கட்சியை ஆரம்பித்த பலர் வெளியேறினார்கள். சிலர் புதிய கட்சிகளை ஆரம்பித்துள்ளார்கள்.

ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் மக்களால் நிராகரிக்கப்பட்டு வரும் பசீர் சேகு தாவூத் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவது இவரது தன்னிச்சையான போக்குக்கு ஒரு உதாரணமாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் தனித்தரப்பு கோரிக்கை கொள்கையளவில் ஜனாதிபதியால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

முஸ்லிம்களுக்குப் பாதகமான முறையில் அரசாங்கம் செயற்படுமானால், ஆதரவு வாபஸ் பெறப்பட்டு, அமைச்சுப் பதவிகளிலிருந்து இராஜினாமா செய்வோம்.

நாடாளுமன்றத்தில் குறிப்பிட்ட மூவரும் நஜீப் ஏ.மஜீத் தலைமையில் மாற்றுக் குழுவினராக செயற்படுவார்கள் விரைவில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் மாற்றுக் குழுவில் இணைய வாய்ப்பு உள்ளது என்றார்.

இது தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாய்ஸ் கருத்துத் தெரிவிக்கையில் -

இவர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்பார்கள் என்பது ஏற்கனவே தெரிந்த விடயம். இது கட்சிக்கு எந்தப் பாதிப்பையும் எற்படுத்தாது. அவர்களைத் தெரிவு செய்த மக்கள் தகுந்த பாடம் தேர்தலுக்கு முன்பே புகட்டுவார்கள்

இவர்கள் மீது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

## அந்நியச் செலவாணி கையிருப்பு ஒன்பது மாதங்களுக்கே போதும்!

### அமைச்சர் அநுர குமார திஸநாயக்க எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் அந்நியச் செலவாணிக் கையிருப்பு ஒன்பது மாதங்களுக்கே போதுமானதாக இருக்கும் அளவுக்கு பொருளாதார நிலை மோசமான கட்டத்தை அடைந்திருக்கிறதென விவசாய அமைச்சரும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில் விவசாய சங்கங்களை நிறுவும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசியதாவது -

அரசாங்கத்தின் பல்வேறு துறைகளும் தற்போது செயற்திறனற்றுக் காணப்படுகின்றன.

நிதி நெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பொருட்கள், சேவைகளின் விலைகள் மேலும் அதிகரிக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

நாட்டில் அந்நியச் செலவாணி பெருமளவு வீழ்ச்சி கண்டிருப்பதால், தற்போது கையிருப்பிலுள்ள நிதி இன்னும் ஒன்பது மாதங்களுக்கே போதுமானதாக உள்ளது.

நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பானது, எட்டுவாரங்களுக்குக் குறைவான காலப்பகுதிக்குப் போதுமானதாக இருப்பின், அந்த நாடு நிதித்துறையில் வீழ்ச்சி கண்டுள்ளது எனக் கூற முடியும். மத்திய வங்கி இந்த நிதியைப் புழக்கத்தில் விட்டால், நாட்டின் நிதிநிலைமை மேலும் மோசமடையும்.

யார் எதைக் கூறியபோதும் நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்கு உலக சந்தையில் அதிகரித்த எண்ணெய் விலையே காரணம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## குற்றச் செயல்களுடன் பொலிஸாருக்கு தொடர்பு!

### சந்திராபெர்னாண்டோதெரிவிப்பு

நாட்டில் நிகழும் குற்றச் செயல்களோடு பொலிஸாருக்குத் தொடர்புகள் இருப்பது தனக்கு தெரியவந்துள்ளதாகப் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரிகள் சிலரும், தற்போது கடமைபுரியும் பொலிஸ் அதிகாரிகளில் சிலரும் குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருவது குறித்து, பொதுமக்கள் முறைப்பாடுகள் தெரிவித்துள்ளனர். இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை - வீதிச் சோதனைச்சாவடிகளில் கடமையில் உள்ள பொலிஸார் பொலிஸ் சீருடையில் உள்ளவர்களை சோதனையிட வேண்டும் என்றும், அவர்களிடம் உரிய உறுதிப்படுத்தல் ஆவணங்கள்? ஆள்அடையாள அட்டைகளைப் பரிசோதிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பொதுமக்களைப் பொது இடங்களிலும், வீடுகளிலும் சோதனையிட முயலும் பொலிஸாரிடம் பொதுமக்கள் அவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு கோர வேண்டும் என்றும் பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள் விடுத்தார்.

# இலங்கையுடனான டெஸ்ட்டில் பாகிஸ்தானுக்கு வெற்றி வாய்ப்பு



(கராச்சி)

பாகிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் - சனத் ஜெயசூரிய மற்றும் சங்ககார ஆகியோர் சதம் அடித்த போதிலும், 7 விக்கெட் இழப்புக்கு 361 ஓட்டங்களையே பெற்றுள்ளதால் இலங்கை அணி நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது.

இலங்கை அணி முதல் இனிங்ஸில் 208 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது. பாகிஸ்தான் அணி அடுத்ததாக விளையாடி 478 ஓட்டங்களைக் குவித்தது.

முதல் இனிங்ஸில் 270 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸில் ஆடத் தொடங்கியது.



நேற்று முன் தினம் மாலை ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 1 விக்கெட் இழப்புக்கு 134 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சனத்ஜெயசூரிய 96 ஓட்டங்களுடனும், சங்ககார 4 ஓட்டங்களுடனும் நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 170 ஆக இருந்தபோது, சனத் ஜெயசூரிய 107 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். 1 சிக்சர் 14 பவுண்டரிகளுடன் - 129 பந்துகளில் இவர் இந்த ஓட்டங்களைப் பெற்றிருந்தார். டனேஸ் கனேரியாவின் பந்துவீச்சில் சொகைப் மலிக்கிடம் பிடிகொடுத்து இவர் ஆட்டமிழந்து சென்றார்.

அடுத்ததாக ஜெயவர்த்தன களமிறங்கி சங்ககாரவுடன் இணைந்து ஆட்டத்தைத் தொடர்ந்தார்.

இருவரும் இணைந்து அபார மாக ஆடி இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். எனினும் இலங்கை அணி 253 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மூன்றாவது விக்கெட் கனேரியாவால் வீழ்த்தப்பட்டது.

66 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 32 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஜெயவர்த்தனா, யாசிர் ஹமிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அபாரமாக எதிர்முனையில் ஆடி ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருந்த சங்ககாரவுடன் அடுத்ததாக சமரவீர ஜோடிசேர்ந்தார். சமரவீர பெரிதாக அடித்து ஆடாவிட்டாலும் - நிலைத்து நின்று எதிர்முனையில் இருந்த சங்ககாரவுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தார்.

எனினும், அணியின் ஓட்ட எண்ணிக்கை 333 ஆக இருந்த போது சமரவீரவின் விக்கெட்டும் டனேஸ் கனேரியாவால் வீழ்த்தப்பட்டது.

இவர் 130 பந்துகளை எதிர்கொண்டு 2 பவுண்டரிகளுடன் 22 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தார்.

இதற்கிடையில் அபாரமாக ஆடி சதம் அடித்து, அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்திய சங்ககார 138 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.



இவர் நவீட் உல் ஹசனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். 251 பந்துகளில் 1 சிக்சர் 20 பவுண்டரிகளுடன் சங்ககார 138 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன் பின்னர் முபாரக் 18 பந்துகளை எதிர்கொண்டு 2 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் ஆட்டமிழந்து செல்ல நேரிட்டது. இவரது விக்கெட்டையும் கனேரியாவே வீழ்த்தினார்.

முபாரக்கின் விக்கெட் வீழ்த்தப்பட்ட சற்று நேரத்திலேயே களுவிதாரணவும் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர் 16 பந்துகளை எதிர்கொண்டு 2 ஓட்டங்களை மட்டும் பெற்ற நிலையில் டனேஸ் கனேரியாவால் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டார்.

சமிந்தவாஸ் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில் - நேற்றைய ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஆட்டநேரமுடிவில் இலங்கை அணி 7 விக்கெட் இழப்புக்கு 361 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன்மூலம், இலங்கை அணி பாகிஸ்தானைவிட 91 ஓட்டங்கள் முன்னணியில் உள்ளது. மூன்று விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இன்றைய ஆட்டத்தில் கணிசமான ஓட்டங்களைக் குவிக்கவோ, நிலைத்து நின்று ஆடவோ வாய்ப்புக்கள் குறைவாக உள்ளதால் - இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணிக்கு வெற்றி வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது.




# சவாலைச் சமாளிக்க மனதளவில் தயார்!

## தமிழக வீரர் தினேஷ் கூறுகிறார்



(சென்னை)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் ஆட, தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் தெரிவு செய்யப்பட்டுள்ளார். நாக்பூர் டெஸ்ட் போட்டியில் இந்தியா மோசமான தோல்வி கண்டதையடுத்து பார்த்திவ் பட்டேல் அணியில் இருந்து நீக்கப்பட்டார். சாதித்தாக வேண்டிய நெருக்கடியில் அணியில் இடம்பிடித்துள்ளதாக தினேஷ் கார்த்திக் நிருபர்களிடம் தெரிவித்தார்.

சிக்கலான நிலையில் அணியில் வாய்ப்புக் கிடைத்துள்ளதை நான் அறிவேன். என்மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அவுஸ்ரேலிய அணியை சமாளிக்க மனதளவில் நான் தயாராகிவிட்டேன்.

நடக்கவிருக்கும் போட்டியில் கண்டிப்பாக திறமையை நிருபித்தாகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இவை எல்லாவற்றையும் மீறி இந்திய டெஸ்ட் அணியில் ஆடும் வாய்ப்புக் கிடைத்ததற்கு நான் உச்சக்கட்ட மகிழ்ச்சி அடைந்துள்ளேன் என்றார்.

சமீபத்தில் நடந்து முடிந்த மினி உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியின்போது முதல்முறையாக இவர் இந்திய அணியில் வாய்ப்புப் பெற்றார். மொத்தம் 2 ஒருநாள் போட்டி களில் மட்டுமே ஆடியுள்ள நிலையில் டெஸ்ட் போட்டியில் ஆடும் வாய்ப்பு தினேஷுக்குக் கிடைத்துள்ளது.

# செஸ் ஒலிம்பியாட் உக்ரேன் சம்பியன்

36 ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டியில் உக்ரேன் சம்பியன் பட்டத்தைப் பெற்றது.

முதல் சுற்று முதலே முன்னிலை பெற்றுவந்த உக்ரேன், தனது கடைசிச் சுற்று ஆட்டத்தில் பிரான்ஸை 3:1 என்ற கணக்கில் தோற்கடித்தது.

ஒரு சுற்றிலும் தோல்வி காணாத உக்ரேன், மொத்தம் 39.5 புள்ளிகளைச் சேர்த்து பட்டத்துக்கு உரிய அணியாகத் தேர்வு பெற்றது.

உக்ரேன் பட்டம் வென்றதால் ரஷ்யாவின் 6 ஆண்டுகால ஆதிக்கம் முடிவுக்கு வந்தது.

ரஷ்யாவும், ஆர்மேனியாவும் தலா 36.5 புள்ளிகளுடன் இரண் டாவது இடத்தில் சிக்கின. சிறப்புப் புள்ளிகளின் அடிப்படையில் ரஷ் யாவுக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. ஆர்மேனியா வெண்கலப் பதக்கத்துடன் திருப்தி அடைய வேண்டியதாயிற்று.

இறுதிச் சுற்றில் கியூபாவைத் தோற்கடித்து மொத்தம் 35 புள்ளிகளுடன் நான்காவது இடத்தைப் பெற்றது அமெரிக்கா.

அதைவிட அரைப்புள்ளி குறை வாகப் பெற்ற இஸ்ரேல் 5 ஆவது இடத்தைப் பெற்றது. இந்தியா 6 ஆம் இடத்தைப் பெற்றது.



ஒஸ்ரியாவில் நடைபெற்றுவரும் லின்ஸ் ஓபன் ரெனிஸ் அரை இறுதியில் ஜெலீனா (சேர்பியா) அடித்த பந்தை முன்னணி வீராங்கனையான அமெய்லி மௌரஸ்மோ திருப்பி அனுப்பும் காட்சி. இவர் 4:6, 6:3, 6:1 என்ற செட் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.



ரோக்கியோவில் நடந்த டபிள்யூ.பி.ஏ. குறைபார குத்துச்சண்டை போட்டியில், ஜப்பான் வீரர் யுடாகா நிடா (இடது) வெனிசுலா வீரர் ஜுவான் லான்டேட்டா விட்ட குத்தை சமாளிக்கிறார். இதில் 2 - 1 என்ற முறையில் நிடா வெற்றி பெற்றுச் சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றார்.

# இந்திய துடுப்பாட்ட வீரர்களிடம் வெற்றிக்கான வேட்கை இல்லை

## ஸ்ரீவ்வோ கருத்து



(சிட்னி)

இந்திய வீரர்களிடம் வெற்றி பெறவேண்டும் என்ற வேட்கை இல்லை. போராடும் துணிச்சல் இல்லை. அதன் விளைவுதான், அவுஸ்ரேலிய அணியின் சரித்திர வெற்றி, என்கிறார் ஸ்ரீவ்வோ.

அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரீவ்வோ இந்திய மண்ணில் டெஸ்ட் தொடர் வெல்ல வேண்டும் என்ற இவரது கனவு கடைசி வரை நனவாகவில்லை. இவர் தலைமையில் அவுஸ்ரேலிய அணி வரிசையாக 16 டெஸ்ட் வெற்றி பெற்று உலக சாதனை செய்தபோது, உலகின் வீழ்த்தமுடியாத அணி என்று கௌரவிக்கப்பட்டது. அப்போது ஸ்ரீவ்வோ வீழ்த்த முடியாத அணி என்று இப்போது அழைக்காதீர்கள். இந்திய அணியை, அதன் சொந்த மண்ணில் வெல்லும்வரை அந்தப் பட்டம் எங்களுக்குப் பொருந்தாது என்றார்.

கிரிக்கெட்டில் இருந்து கடந்த ஜனவரியில் அவர் ஓய்வு பெற்றாலும்கூட, இந்தமுறை இந்தியப் பயணத்தில் டெஸ்ட் தொடரை வென்றே தீரவேண்டும் என்று ரிக்கி பொண்டிங் தலைமையிலான அவுஸ்ரேலிய அணிக்கு ஊக்கமளித்தார். இந்த வெற்றி குறித்து அவுஸ்ரேலிய நாளிதழுக்கு அவர் தெரிவித்ததாவது -

அவுஸ்ரேலிய கிரிக்கெட் வரலாற்றில் இது மிகச்சிறந்த வெற்றி. 35 ஆண்டுகளாக முடியாத ஒரு விடயத்தை அடம் கில்கிறிஸ்ட் மற்றும் அவரது வீரர்கள் சாதித்துள்ளனர். இந்த அருமையான தருணத்தில், அவுஸ்ரேலிய அணியில் நானும் இல்லாமல் போய்விட்டதே என்ற வருத்தம் எனக்கு இருக்கிறது. ஆனால், அவுஸ்ரேலிய அணியின் இந்த வளர்ச்சிக்கு நானும் ஒரு காரணம் என்பதை நினைத்துப் பெருமைப்படுகிறேன்.

கடந்த முறை எனது தலைமையில் இந்தியப் பயணம் மேற்கொண்டபோது, வெற்றிக்கு வெகு அருகில் நெருங்கினோம். ஆனாலும், இந்திய துடுப்பாட்ட வீரர்கள் தங்கள் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி வரலாறு படைத்து விட்டனர். அப்போது காட்டிய வெறி, வெற்றிக்கான வேட்கை இந்திய துடுப்பாட்ட வீரர்களிடம் இப்போது இல்லை. நாக்பூரில் இந்தியாவின் தோல்விக்குக் காரணம் அதுதான்.

வெற்றியை நோக்கிப் போராடும் துணிச்சல் இந்திய துடுப்பாட்ட வீரர்களிடம் சுத்தமாக இல்லை. அவுஸ்ரேலிய வீரர்கள், கடும் நெருக்கடி கொடுத்து இந்திய துடுப்பாட்ட வீரர்களை வெளியேற்றி விட்டனர். அவுஸ்ரேலிய அணியின் தன்னம்பிக்கை, மாறுபட்ட அணுகுமுறைக்குக் கிடைத்த வெற்றி இது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### இராணுவத்தினரை வெளியேறுமாறு கோரிக்கை

வடமராட்சி கிழக்கு அம்பனில் உள்ள பொதுக் கட்டடங்களில் இருந்து இராணுவத்தினர் விலக வேண்டுமென இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்த நிறுத்தம் ஏற்பட்டு பல வருடங்கள் கடந்த நிலையிலும், பொதுக்கட்டடங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரேயே இந்தப்பகுதியிலிருந்து விலகுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

### இலையான்களின் தொல்லை அதிகரிப்பு

வடமராட்சிப் பிரதேசமெங்கும் பரவலாக இலையான்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இதனால் வீடுகளிலும், தேநீர்ச்சாலைகளிலும் பெருந்தொல்லைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே, சுகாதாரத் துறையினர் இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

### நூலகத்தில் அங்கத்தவராக அரிய வாய்ப்பு

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் நல்லூர் பிரதேச சபையில் பொது நூலகங்களில் 100 ரூபாவை மட்டும் செலுத்தி, அங்கத்தவராகும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச மாணவ, மாணவியர்கள் நூலகங்களில் தொடர்பு கொண்டு, அங்குள்ள பெறுமதியான நூல்களை எடுத்துக் கற்றுப் பயன்பெறுமாறும், அதனைப் பிறருக்கும் எடுத்துக்கூறி ஊக்குவிக்கும் படியும் நல்லூர் பிரதேச சபையினர் கேட்டுள்ளனர். (63)

### வீரச்சாவு

கடந்த 27.06.1997 ஆம் ஆணடு திருகோணமலை கடற்பரப்பில் கடற்படையினரின் நேரடி மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

மத்தியூஸ் வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தைச் சொந்த முகவரியாகக் கொண்ட, மேஜர் ஜீவா அல்லது திருமாறன் என்ற போராளியே வீரச்சாவடைந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

### கட்டட வேலைகள் இடைநடுவில்

மாதகல் காஞ்சிபுரம் கலைவாணி சனசமூகநிலையம் அத்திவாரமிடப்பட்ட நிலையில் மேற்கொண்டு வேலைகளை முன்னெடுக்க நிதியில்லாத காரணத்தால் இடைநடுவில் கைவிடப்பட்ட நிலையிலுள்ளது. இதற்கான மிகுதி நிதி ரூபா 3 லட்சத்தை வலி.மேற்கு பிரதேசபையூடாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடமிருந்து பெறுவதற்குக் கடிதமூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (101)

### கோப்பாயில் வீதிகள் திருத்தும் பணி ஆரம்பம்

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரனின் சிபார்சுக்கு அமைய கோப்பாய்த் தொகுதியில் முதற்கட்டமாக கார்ப் நிறுவனத்தின் உதவித் திட்டத்தின்கீழ் வீதிகள் செப்பனிடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அச்செழு நாச்சிமார் கோயில் வீதி, குடியேற்றத் திட்டவீதி, புத்தூர், விளையாட்டு அரங்க வீது, கல்வியங்காடு- கருத்தோலை வீதி, இருபாலை- சந்தைவீதி, ஆவரங்கால் ஆகியன முதற்கட்டத் திட்டத்தின் கீழ் சிபார்சு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

நூற்றுக்கணக்கான வீதிகள் 25-30 வருடங்களாகத் திருத்தப்படாமலேயே இருக்கின்றன. போக்குவரத்துக்கு அதிமுக்கியமான வீதிகள் திருத்தப்பட்டு வருகின்றன. படிப்படியாக யாழ். மாவட்டத்தில் சகல வீதிகளும் திருத்தப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பனை அபிவிருத்திச் சபையின்

# தலைமைச் செயலகத்தை தாயகத்தில் இயக்க நடவடிக்கை எடுக்கவும்

### சிவநேசன் எம்.பி. கோரிக்கை

**பனை அபிவிருத்திச் சபையின் தலைமைச் செயலகம் தமிழர் தாயக நிலப்பரப்பிலேயே இயங்கவேண்டும். எனவே, கொழும்பில் இயங்கிவரும் பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தைத் தாயகப்பகுதியில் இயக்க நடவடிக்கை எடுக்குமாறு, அதனை வழிநடத்தும் அமைச்சும் அரசும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் கோரியுள்ளார்.**

**இது தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் -**

1972 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ப.தெ.வ.கூ.சங்கங்களின் வளர்ச்சி கருதி 1978 ஆம் ஆண்டில் பனை அபிவிருத்திச்சபை ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம், பனம் தொழில் வல்லநர்களின் வாழ்வு மேம்பாட்டுக்கான வழிகாட்டல் வழங்குதல், அதற்கான திட்டங்கள் தயாரித்தல், பனம் பொருள் உற்பத்தி நிபுணத்துவம், பனைவள ஆராய்ச்சி, பனைவள அபிவிருத்தி, பனம்பொருள் சந்தைப்படுத்தல், நவீன தொழில்நுட்ப முறைகள் அறிமுகப்படுத்தல் போன்ற நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சபை, இன்று அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு சபையாக மாறிவருவது, இந்தத் துறை சார்ந்த ஏனைய நிறுவனங்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தி வருகிறது.

குறிப்பாக மேற்குறித்த சிறப்புப் பிரிவுகள் பனை அபிவிருத்திச் சபையில் இருந்தபோதும், இவை அனைத்தும் செயலிழந்து உறங்கும் நிலையில் கிடக்கின்றன. காரணம் சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள் சபையினுடைய செயற்பாட்டில் மனமுடைந்து வேறு பதவிகளுக்குச் சென்றுள்ள நிலைமையும், பனை வளத்தின் பயனைப்பற்றித் தெரியாத பலர் - சபையின் பொறுப்பான கதிரைகளை அலங்கரிக்கும் நிலையும் பனைவள அபிவிருத்தியைக் குன்றச் செய்துள்ளது.

இந்த அமைச்சின் கீழுள்ள இந்தச் சபை - பனை வளத்தைத் தமது ஜீவனோபாயமாகக் கொண்ட 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தமிழீழ பிரதேசத்தில் வாழுகின்ற பயனாளிகளைக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் தமிழர் தாயகத்தில் ஓர் பனை அபிவிருத்திச் சபையை, பனை அபிவிருத்திச் சபைக்கென ஒதுக்கப்படும் அரச நிதி வெறுமனே பணியாளர் சம்பளத்துடன் முடிவடைகின்ற நிலை கடந்த பல ஆண்டுகளாக உள்ளது. இலங்கை அரசு ஒரே ஒரு தமிழர்களின் சபையாகவுள்ள இந்தப் பனை அபிவிருத்திச் சபைக்குத் திட்டமிட்டுப் புறக்கணிப்பதன் மூலம் தமிழர் தாயக அபிவிருத்தியைப் புறக்கணிக்கும் நடவடிக்கையாகவே அவதானிக்க முடிகிறது. இந்த நடவடிக்கைக்குத் தமிழ் அமைசசொன்று துணைபோவது தமிழர்களுக்கு துரோகமிழைக்கும் செயலாகவே அவதானிக்க முடிகிறது.

இவ்வாறான நிலை தொடர்ந்து நடைபெறுமேயானால் இந்தச் சபையானது தமிழ் பேசும் மக்களிடமிருந்து அந்நியப்படும். அவ்வாறு அந்நியப்படுத்தும் நோக்கமாகவே தற்போது யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தில் இருந்து உத்தியோகத்தர்கள் கொழும்புக்கு மாற்றப்படுவதும், தலைமைச் செயலகம் கொழும்பில் அமையவுள்ளதுமான செய்திகள் பனம் தொழில்சார் மக்கள் மனங்களில் பனை அபிவிருத்திச் சபை மீது வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. பனை அபிவிருத்திச் சபை இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்வது தமிழ்த் தேசிய விருட்சம் ஒன்றின் அபிவிருத்தி பற்றிச் சிந்திக்காத நிலையையும், தமிழர் தாயக நிலப்பரப்பின் அபிவிருத்தியையும் விரும்பாத போக்கையே காட்டி நிற்கும்.

எனவே, பனை அபிவிருத்திச் சபையின் தலைமைச் செயலகம் தமிழர் தாயக நிலப்பரப்பிலேயே இயங்கவேண்டும். இதன் மூலம் தமிழர் தாயகத்தில் பரந்து நிறைந்திருக்கின்ற பனை வளமும், அதனைப் பயன்படுத்தும் மக்களும் அபிவிருத்தியடையக்கூடிய செயற்பாடுகள் இந்தச் சபையால் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த நிலையிலிருந்து பனை அபிவிருத்திச் சபை மாறுபட்டு, கொழும்பில் தலைமை அலுவலகத்தை வைத்துச் செயற்பட முயலுமேயானால், தமிழர் தாயகத்தில் தனியான பனை அபிவிருத்திக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கும் நிறுவனம் ஒன்று உருவாகுவது உறுதியாக்கப்படும். இதனைப் பனை அபிவிருத்திச் சபையை வழிநடத்தும் அமைச்சும், பனைவள அபிவிருத்தியைப் புறக்கணித்துவரும் இலங்கை அரசும் கவனத்தில் எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நீண்டகாலமாகத் திருத்தப்படாத எழுவைதீவு பிரதேச வீதிகள்!



(யாழ்ப்பாணம்)

எழுவைதீவுப் பிரதேச மக்களின் போக்குவரத்துக்கு, அங்குள்ள பிரதான வீதிகள் மோசமான முறையில் சேதமடைந்து நீண்டகாலமாகத் திருத்தம் செய்யப்படாதிருப்பதால் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது.

கடந்த சுமார் பத்து வருடங்களுக்கும் மேலாக பிரதான வீதிகள் திருத்தம் செய்யப்படாமல் உள்ளது. ஏற்கனவே போடப்பட்டுள்ள வீதி மிகவும் மோசமான நிலையில், சேதமடைந்து, போடப்பட்ட கற்கள் சிதறுண்டு கிடப்பதனால் பாதசாரிகளும், சைக்கிளில் செல்வோரும் பலத்த அசௌகரியங்களையும் விபத்துக்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இந்த வீதியில் குறிப்பிட்டளவு தூரம் திருத்தம் செய்யவென கற்கள் கொண்டு வந்து பறிக்கப்பட்டுள்ளபோதும், வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் பறிக்கப்பட்ட கற்கள் சேதமாகி, வீதியெங்கும் சிதறிக்கிடக்கின்றன.

அங்குள்ள சிறுவீதிகளும் நீண்டகாலமாக செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாக மழை காலங்களில் பாவிக்கமுடியாதளவுக்கு சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

### குழாய் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட பளை, புலோப்பளைக் கிராமங்களுக்குக் குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்படவிருக்கிறது.

இதன் ஆரம்பக் கட்ட வேலைகளாக பளை பொதுச்சந்தை வளவினுள் நீர்த்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு வருவதுடன், புலோப்பளை கிராமம் மற்றும் பளை வைத்திய சாலைவரை நிலத்துக்குக்கீழ் வீதியோரங்களில் நீர்க் குழாய்கள் அமைக்கும் வேலைகள் முடிவடைந்துள்ளன. இந்தத் திட்டத்துக்கு நீர்ப் வேலைத்திட்டத்தின்கீழ் ரூபா ஐம்பது லட்சம் வழங்கப்பட்டுள்ளன. (21)

## வீதியில் வெட்டப்பட்ட கிடங்குகளால் போக்குவரத்துக்கு அசௌகரியம்

(உடுவில்)

யாழ்.நகரில் அதிகமாகப் போக்குவரத்து நிறைந்து காணப்படும் காங்கேசன்துறை வீதியில் தொலைத்தொடர்பு நிறுவனம் தரைக்கீழ் கேபிள் அமைக்கும் பணிக்காக வெட்டப்பட்ட வாய்க்கால் கிடங்கு இரண்டு வருடமாகியும் இன்னமும் பூரணமாகத் திருத்தி முடிக்கப்படவில்லை.

யாழ்.இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகித் தட்டாதெருச் சந்தி வரையான ஒரு மைலுக்குட்பட்ட பிரதேசத்தில் வீதித் திருத்தத்துக்கெனக் கற்கள் குவித்து வைக்கப்பட்ட போதிலும் திருத்தம் செய்யப்படவில்லை.

இந்தப் பகுதியில் - பாடசாலை, வாகனம் திருத்தும் கராஜ், கடைத்தொகுதிகள் காணப்படுவதால் இதனருகில் பாரிய வாகனங்கள் நீண்டநேரமாக நிறுத்தி வைக்கப்படுகின்றன. இதனால் அவற்றின் அருகால் செல்லும் வாகனங்கள் கிடங்கில் விழாது செல்வதற்காகக் குறுகிய இடைவெளியில் செல்லுவதால் விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. குவித்து வைத்த கற்கள் பல வருடமாகியதால் சிதறிப் போயுள்ளன. இவற்றால் பாதசாரிகளும், சைக்கிளில் செல்வோரும் விபத்துக்குள்ளாக நேரிடுகிறது.

எனவே, உரிய தரப்பினர் உடனடியாகப் புனரமைப்பு வேலை களை ஆரம்பிக்கவேண்டுமென அந்தப் பகுதி மக்களும், பிரயாணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (101)

## உலக விஞ்ஞான தினம் அனுஷ்டிக்க அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

நவம்பர் 10 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக விஞ்ஞான தினம் "சமாதானமும் நிலையான அபிவிருத்திக்குமான விஞ்ஞானமும்" என்ற தொனிப்பொருளில் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

இந்தத்தினத்தன்று பாடசாலைகளில் அல்லது பாடசாலைக்கிடையில் பொது அறிவுப்போட்டிகளை நடத்துவதில், விஞ்ஞான பாடம் தொடர்பாகப் பொருத்தமான தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துதல், விஞ்ஞானக் கண்காட்சி போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துமாறு, கல்வி அமைச்சின் செயலாளர் சகல பாடசாலை அதிபர் களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார். (122)

## யாழ்.நகர் பகுதியில்

# வீதியோரங்களில் வாகனம் தரிப்பு; போக்குவரத்துக்கு இடையூறு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் தனியார் சேவையில் ஈடுபட்டுவரும் மினிபஸ்கள் - தமது சேவை நேரம் வரும் வரையும் ஸ்ரான்லி வீதியிலிருந்து மினிபஸ் நிலையத்துக்குச் செல்லும் ஒருவழிப் போக்குவரத்து வீதியில் தரித்து நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த நிலையில் அந்த வீதியூடாகச் செல்லும் ஏனைய வாகனங்கள், நடைபயணிகள் அதிக சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வீதியூடாகத் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் பலதரப்பட்டவர்களும் அதிகளவில் வீதியைப் பயன்படுத்தி வருவதால் சேவையில் ஈடுபடும் மினி பஸ்கள் தரிப்பிடத்தை அடைவதற்கான வழிப்பாதையாகவும் இந்த வீதி அமைந்துள்ளது.

இந்த நிலையில் இவ்வாறான வாகனங்கள் தரித்து நிற்பதால் போக்குவரத்துக்குத் தாமதங்கள் ஏற்படுவதுடன் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு மினிபஸ் சாரதிகள் தமது வாகனங்களை நிறுத்துவதைத் தவிர்க்கவேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், யாழ்.நகரப் பகுதியில் பொதுவான வாகனத்தரிப்பிடம் அமைக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (90)






# சிங்களத்தி

கருணைரவி




பஸ் வேகமாகச் சென்றது...

காற்றுக்கு மயிர்கள் கிழறுப்பட, நேசாச்சி 'சைற்' கண்ணாடியை இழுத்து விட்டாள். 'ட்றைவர்' மேடு பள்ளம் என்று பார்க்காது வேகமாக ஓடிக்கொண்டிருந்தான். பஸ் குலுக்கக்குலுக்க அவளுக்குச் சினமாய் இருந்தது. பயமாகவும் இருக்க, முன் சீற்றை இறுக்கிப் பிடித்தாள்.

அவளின் முன் சீற்றில் ஒரு வாடல் இருந்தான். அவனுக்குப் பக்கத்தில் கர்ப்பிணியும் இருந்தாள். பெரிய வயிறு. கர்ப்பிணிகளுக்கு வயிறு குலுங்கக் கூடாதாம் அவள் 'ட்றைவரைப்' பேசுவம் என்றிலலை, பேச்சி சிரிக்கிறாள்.

நேசாச்சி, பிடித்த சீற்றை இன்னும் விடவில்லை. கோபத்தோடு 'ட்றைவரைப் பார்த்தாள், கண்ணாடியில் அவனின் முகம் தெரிந்தது, நல்ல இளந்தாரிப் பொடியன் சாந்தமான முகம், நாக்கை நினைத்தபடி இருநதான். இடைக்கிடை கண்களை எவருக்கோ எறிந்தும் பார்க்கிறான்.

முன்பு என்றால் வயது வந்தவர்கள்தானே C.T.B களில் வயதுக்கேற்ற பக்குவம் இருக்கும், முன்பு 750 லைனில் 1205 நம்பர் பஸ் இப்பவும் அவளின் கண்களில் வந்தன. அந்தப் பஸ்ஸின் இதம் இப்ப எந்தப் பஸ்களில் இருக்கிறது?

'மகளிர் மாத்திரம்' என்ற எழுத்துக்குப் பக்கத்தில் தான் பெரிய பாட்டுப் பெட்டி ஏ.எம் ராஜாவின் 'உள்ளம் தேடாதே என்று சொல்லுதே என்ன சொன்னாலும் கண்தேடுதே' என்ற பாடலை தம்பையா நெல்லியடியில் போடுவான். பாட்டு முடியிறதுக்கிடையில் பஸ் குஞ்சர்கடைச் சந்திக்குப் போய்விடும்.

அந்த 'மகளீர் மாத்திரம்' என்றதை யாரோ 'மூத்திரம்' என்று மாற்றி விட்டார்கள் 'ரியூட்டறறி'ப் பெடியள்தான் என்று எத்தனை சனங்கள் அதைப் பார்த்துப் பேசினதுகள்?

நேசாச்சி பிடித்த முன்சீற்றை இன்னும் விடவில்லை. கண்கள் மட்டும் பஸ்ஸின் எல்லாப் பக்கங்களுக்கும் சுழன்றன. பஸ்ஸின் எல்லாப் பக்கங்களிலும் சினிமாப் படங்கள் ஒட்டியிருந்தன. எல்லாம் வெட்கக் கேடான படங்கள்.

இந்தப் படங்களைப் பார்த்துப் பேசவோ, கிழிக்கவோ இப்ப இஞ்சை எவரும் இல்லை. எங்கள் கண்களுக்கு முன்னால் எத்தனை தியாகங்கள் நடந்தன? எத்தனை பிரமிப்புக்கள் நடந்தன? அவைகளில் ஒரு படங்களையேனும் ஒட்டலாம் தானே?

யாரோ மணியடித்தார்கள். பஸ் தாண்டிக்குளத்தில் நின்றது. ஒரு அப்பு மட்டும் இறங்கினார். நாரி சரியான கூனல். அப்பு கொடிகாமம் போல, தட்டிவான்களில் பயணம் செய்திருக்க வேணும்.

அப்பு இறங்க வேறொருத்தி ஏறினாள். கையில் சின்னப் பையிலிருந்தது. அதுக்குள் ஐந்தாறு முருங்கைக் காய்கள் தலையை நீட்டின. நேசாச்சி, அவளை வடிவாகப் பார்த்தாள் அது கடற்கரைக்கு மீன் தெரியவருகிற சின்னத்தங்கம்.

அவளைக் கண்டதும் நேசாச்சி, முன் சீற்றிலிருக்கும் வாடலுக்குப் பின்னால் ஒழிந்தாள். கண்டால் பெரிய சத்தமாகக் கதைப்பாள், தின்றது பேண்டதிலிருந்து தீட்டோடு கிணற்றில் தண்ணியள்ளியதையும் பஸ் என்றும் பார்க்காது சொல்லுவாள்.

அம்மாடி.. அவளால் நேசாச்சி ஒருநாள் கலங்கின கலக்கம், பேத்தி வசந்தி இயக்கம். அன்று சுண்டிக்குளக் கடலில் பெரிய சண்டை நடந்தது. கிபிரும் கண்டபடி அடிச்சுக்கொண்டிருந்தது சாளையிலிருந்து பெடியள் நல்ல குடுவை குடுத்தவங்கள். செல்லடிகளிலை பொக்கணைச் சனங்கள் சிதறியது.

ஏதும் சண்டைகள் நடந்தால் உடனே நேசாச்சி புதுக்குடியிருப்புக்கு ஓடுவாள். பேத்திக்கு ஆயுள்வேண்டி சிவன் கோயிலில் எள்ளுப் பொட்டளி எரிப்பாள். அன்றும் கோயிலால் வரத்தான் சின்னத் தங்கம் தெருவில் கண்டாள்.

'நேசாச்சோய்... கடலுக்கை டோறா அடிச்சது வசந்தியாம்' நிவாரணச் சாமான்களை இறக்கி விட்டுத் தான் சொன்னாள்.

'என்றை கடவுள்....'

நேசாச்சி, புழுதியில் விழுந்தாள், பேத்தி ஒவ்வொரு சிறகுகளாய் நேசாச்சியின் கண்களில் வந்தபடியிருந்தாள் பயத்தில் தெருக்களில் சனங்கள் குறைவு. செந்தூரன் சிலையடியில் நின்ற மீன்கார மரிய தாஸ் தான் மீன்பெட்டியை கீழே போட்டு விட்டு ஓடிவந்து தூக்கினான். எழும்பிய மனிசி அழுதழுது மரியதாஸை நாய்ப்பேச்சுப் பேசினாள். இன்று வெள்ளிக்கிழமை மீன் கையால் ஏன் தொட்டனி என்று?

அந்தப் பேச்சோடு அப்படியே மயங்கிப் போனாள்.

சின்னத்தங்கம், 'வதந்தி' என்றதைத் தான் வசந்தி என்றாள். அவளைப் பார்க்க சிரிப்பும், பரிதாபமாகவும் இருந்தது நேசாச்சிக்கு தாண்டிக்குளம் தான் அவளின் ஊர். ஆமி தாண்டிக் குளத்துக்குவர அப்படியே இரணைப் பாலைககு ஓடி வந்தாள் இப்ப பாதை திறந்ததும் ஊருக்குப் போய்விட்டாள்.

அவளின் புருசன் காளிமுத்து, வேணாவிலில் நல்ல பூசாரி. ஆதரித்த தெய்வத்தை அப்படியே விட்டு, ஒரு கண்டிப் பொம்பிளையைக் கிழப்பிக்கொண்டு போட்டானாம் நாயன்.

நேசாச்சி மறைந்து மறைந்து இடைக்கிடை அவளையே பார்த்தபடி இருந்தாள் ஆளகட்டை ஐந்தாறு ஆண்பிள்ளைகளுக்கு நடுவில் நின்றாள்.

சின்னத்தங்கத்தோடு ஏறிய ஒரு பெண் கம்பியில் தொங்கிக் கொண்டு நின்றாள். மறுகையில் சின்னக் குழந்தை, ஒரு வயது இருக்கும். அந்தப் பெண் வவுனியா என்று டிக்கற் எடுத்தாள் நடத்துநரிடம் சில்லறைகள் நிறைய இருந்தன. மிகுதி ஐந்து ரூபாவைக் கொடுத்துவிட்டு மூன்று ரூபா 'இல்லை' என்றான். நேசாசசிக்கும் அவன் நான்கு ரூபாய் கொடுக்க வேணும்.

அந்தப் பெண்ணைப் பார்க்க நேசாச்சிக்குப் பரிதாபமாக இருந்தது. குழந்தை இடுப்பால் வழிய வழிய கையால் எத்திக்கொண்டு நின்றாள். அந்தக் குழந்தைப் பிள்ளைக் காரிக்கு எவரும் எழும்பி இடம்கொடுக்க வில்லை. அந்தப் பெண்ணுக்குப் பக்கத்தில் ஒரு ஐயா இருந்தார். வாத்தியாராய் இருக்க வேணும் உடனே அவருக்கு நித்திரை வந்து விட்டது. நேசாச்சி, நடத்துநரைப் பார்த்தாள். அவன் தானே அந்தப் பெண்ணுக்கு இடம் எடுத்துக் கொடுக்க வேணும். அவன் கதவுக் கரையில் கணக்குப் பார்த்துக் கொண்டு நின்றான். நேசாச்சி, இருக்கிற சனங்களைப் பார்த்தாள். எவரும் அந்தப் பெண்மீது பரிதாபப்பட்டதாகத் தெரியவில்லை. முன்னுக்கு இருக்கிற அந்த வாடலை எட்டிப்பார்த்தாள் அவன் முன்சீற்றில் தலையைக் குற்றிக் கொண்டு இருந்தான். கர்ப்பிணி அவளை விடு. அந்த நரைச்சதேனும் எழும்பிவிடலாம் தானே மூதேவி.

நேசாச்சிக்கு ஏலுமென்றால் தான் எழும்பி இடம்கொடுத்திருப்பாள். தொட்டிக்குள் வழுக்கி விழுந்து முழங்கால் சிரட்டையில் பெரிய வீக்கம். கிளிநொச்சியில் மருந்தெடுத்து இன்னும் மாறவில்லை வவுனியாவில் நல்ல வைத்தியராம் பத்துநாள் சென்றாலும் மாறினவுடனை தான் வருவதாகப் போகிறாள்.

கையில் ஆயிரம் ரூபாதான் கொண்டு போகிறாள். மகன் வெளிநாடு போய் பத்து வருசம், நல்ல சம்பளம். கதைத்தால் காசு அனுப்புவான். மருமகளிடம் விடியத்தான் ரெலிபோன் நம்பரைக் கேட்டாள். அவள் கொடுக்க வில்லை. அந்த ஆத்திரமும் இந்த ஆத்திரமும் சேர்ந்து அவளைப் பிய்த்துக் கொண்டிருந்தது.

அந்தப் பெண்ணை நினைக்க அவளுக்கு கவலையாக இருந்தது. மெதுவாக சீற்றில் கைகளை ஊன்றினாள். வாடலுக்கு மேலால் தலையை நீட்டி அந்தப் பெண்ணைப் பார்த்தாள் குழந்தையை வாங்கி மடியில் வைத்திருப்பதற்கு. அந்தப் பெண் அவளைப் பார்க்கவில்லை சைற்பக்கமாக வெளியைப் பார்த்துக் கொண்டு நின்றாள். அவளுக்கு அந்தச் சனங்களைப் பார்க்க எரிச்சலாய் இருக்கவேணும்.

வியர்த்து அவளுக்கு சட்டை ஈரமாய் இருந்தது. நீலக் கலர் பொங்குக் கைச்சட்டை நல்லவடிவு. பொக்குள் தெரிய சாறி கட்டியிருந்தாள் எங்கடை கிளாக்கற்றை வதனா போல கண்களை அகட்டி இன்னொரு முறை அந்தப் பெண்ணைப் பார்த்தாள்.

அட, சிங்களப் பெண்! முகம் சுருங்க, அந்தப் பெண்ணையே கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணுக்கு சீற்றைக் கொடுக்காதிருக்கும் அனைவர் மேலும் நினைவை எறிந்தாள்.

முன்பு ஒரு காலத்தில் இந்தப் பெண்ணின் இனத்தவர்கள் பஸ்களில் ஏறினால் உடனே நாங்கள் எழும்ப வேணுமாம் அவர்களுக்கு சீற்றுகள் கொடுக்க வேணுமாம் மதவாச்சி தாண்டினால் சீற்கொடுக்காத ஆள் சரி என்று புருசன் தம்பையா ஒரு நாள் சொன்னதை நினைத்துப் பார்த்தாள்.

இவைகள் எல்லாம் தெரிந்தவர்கள் தானா இப்ப இந்த பஸ்ஸில் இருக்கின்றார்கள். அல்லது அவர் இடம்கொடுப்பார்... இவர் இடம்கொடுப்பார் நான் ஏன் எழும்புவான் என மனதைப் பதகளித்துக் கொண்டுதானா எல்லோரும் இருக்கின்றார்கள். அல்லது எல்லாம் எனக்கே பிறர்களின் அனுதாபமற்ற வெறும் சுயநலக்காரர்கள்தானா இந்தப் பஸ்ஸில் இருக்கிறார்கள்?

குரங்கொன்று குறுக்கே பாய்ந்தது. 'ட்றைவர்' பிறேக்கை குத்திப் பிடித்தான். சனங்கள் ஒருவரோடு ஒருவர் இடிபட குழந்தை வீரிட்டது... அந்தக் குழந்தையின் வீரிடலில் அந்த வாடல் தலையை மிதத்தினான் அப்பதான் அந்தக் குழந்தையோடு அந்தப் பெண் சீற்றில்லாது நின்றதைக் கண்டான். உடனே சீற்றுக்குக் கீழே வைத்திருந்த ஊன்று கோலை மெதுவாக எடுத்து எழும்பியவன் அந்தச் சிங்களப் பெண்ணை தானிருந்த சீற்றில் இருக்கச் சொன்னான். அந்த வாடலை வடிவா கப் பார்த்ததும் நேசாச்சி பூரித்துப் போனாள் அவன் ஆனையிறவுச் சண்டையில் ஒரு காலைக கொடுத்த எங்கட ஆதவன் தம்பிதான்.

# நித்திரை கலைந்தது

"தம்பியவை நல்லா முன்னுக்குப் போங்கோ. முன்னுக்கு நல்ல இடமிருக்கு. அம்மா நீங்களும் கொஞ்சம் முன்னுக்குப் போங்கோ பாப்பம்."

ஒருவரும் அசைந்ததாகத் தெரியவில்லை. 'அவன் விசரன் சும்மா கத்திறான்' என்ற நினைப்புப்போலும், யாரும் நின்ற இடத்திலிருந்து அசையவேயில்லை. வயது முதிர்ந்தவர்கள் இருக்கைகளின் கம்பிகளைப் பிடித்தபடி நின்றது நியாயந்தான். ஆனால் இளைஞர்கள், அருகில் நின்ற யுவதிகளை விட்டுப்பிரிய மனமில்லாமல் நிற்கிறார்களோ? கண்டக்டர் கத்தியதுதான் மிச்சம்.

எனக்கு முன்சீற்றில் இருந்த பெரியவர் ஒருவர் வாசித்துக்கொண்டிருந்த ஈழநாடு பத்திரிகையை மூடிவிட்டுப் புதினம் பார்க்கத் தலைப்பட்டார். அவருக்குப் பக்கத்தில் இருந்த இளைஞனொருவன் தியானத்தில் இருப்பதுபோலக் கண்களை மூடிக்கொண்டிருந்தான். பெரியவர் ஒருமுறை கண்களை இடுக்கிக்கொண்டு அவனைப் பார்த்தார். திடீரென்றுவந்த நித்திரைபோல அவருக்குப்



பட்டது. ஏனெனில் சீற்கொடுக்க வேண்டி வருமே என்பதற்காகவும் சிலருக்குத் திடீர் தூக்கம் வருவதுண்டு.

அந்த வயோதிபர் மிகவும் நிதானமாக அங்கும் இங்குமாகப் பார்த்தார். அலையில் புரண்டு வருவதுபோல சுமார் 55 வயது மதிக்கத்தக்க "அம்மா" ஆடி அசைந்து, நெளிந்து வளைந்து நுழைந்துகொண்டிருந்தார். தியானம் செய்தவருக்கு அருகில் கம்பியைப் பிடித்தபடி நின்றுகொண்டு அப்படியும், இப்படியும் எதையோ தேடுவதுபோலப் பார்த்தார். அவர் என்ன தேடுகிறார் என்பது அந்த வயோதிபருக்கு விளங்கியிருக்கவேண்டும். இருந்தும் கொஞ்சநேரம் விளங்காதவர்போல இருந்தார்.

தியானம் கலையாத இளைஞன், இதைக் கண்டானோ இல்லையோ, அவனில் எந்த மாற்றமும் தெரியவிலலை. வயோதிபர் மெல்ல எழுவதற்கு ஆயத்தமானார். அவர் எழுவதைக் கண்டதுதான் தாமதம், முன்னால் நின்ற இளைஞன் ஒருவன் ஆட்களை விலத்திக்கொண்டு முன்னேறினான் ஐயாவின் இடத்துக்கு. உடனே வயோதிபர், 'தம்பி! அந்த அம்மா இருக்கட்டும்' என்று சொல்லிவிட்டு முகத்தை அசைத்து அவரை இருக்கும்படி சைகை செய்தார். அம்மாவும் சுற்றி நின்றவர்களின் வலைப்பின்னலிலிருந்து விடுபட்டுக் கொண்டு இருக்கையில் அமர்ந்தார்.

தியானம் கலைந்த இளைஞன் திரும்பிப் பார்த்தான். "ஐயா இறங்கிவிட்டார் போலை, அந்த இடத்திலை அம்மா இருக்கிறா" என நினைத்துக்கொண்டு பார்வையை நீள விட்டான். ஐயா அடுத்த இருக்கைக்கு அருகில், மேலே தொங்கிய கைப்பிடியில் தொங்கிக் கொண்டு நிற்பது தெரிந்தது.

ஐயா திரும்பிப் பார்த்தார், இளைஞனுக்கு என்னவோ மனத்துக்குப் பாரமாக இருந்திருக்க வேண்டும். "ஐயா இப்பிடி இருங்கோவன்" என்றான். "இல்லைதம்பி எனக்கு என்ரை காலிலை நிக்கக்கூடிய தைரிய மிருக்கு" இளைஞன் வெட்கத்தால் தலை குனிந்தான்.

- மாவன்னா

# நூல் அகம்




மரபு தழுவிய நாட்டுக் கூத்துக் கலைகள் தற்காலத்தில் அருகிவருகின்ற வேளையில் பெயர் சொல்லும்படியாக சில அறிஞர்களின் முயற்சியால் நாட்டுக் கூத்துக் கலை இன்னும் சிறிது காலம் உயிர்வாழும் என்று கூறமுடிகின்றது.

இந்தவகையில் நாட்டுக்கூத்துக் கலையைப் பேணிக் காப்பதிலும்

**நூலின் பெயர** - வீரத்தளபதி (தென்மோடிக் கூத்து)
**ஆசிரியர்** - கலைக்கவி அமரர் நீ.எஸ் தாக்கி
**முதற்பிரதி** - யூலை 2004
**அச்சகம்** - யாழ்.நாவாயூர் ஒன்றியம்

இளஞ் சந்ததியிடையே அவற்றைப் பரம்பல் செய்வதிலும் கலைக்கவி அமரர் நீ.எஸ்தாக்கி அவர்களின் பணியும் முதன்மைவாய்ந்த ஒன்றாக அமைகின்றது.

கலைக்கவி அமரர் நீ.எஸ்.தாக்கி அவர்கள் யாழ்ப்பாணம் நாவாந்துறையைச் சேர்ந்த ஒரு கலைஞர் ஆவார். பல உரை நாடகங்களையும், நாட்டுக் கூத்துக்களையும் ஆக்கி தாமே நெறியாள்கை செய்து (அண்ணாவி) அரங்கேற்றியுள்ளார்.

1965 ஆம் ஆண்டு சென்மேரிஸ் முத்தமிழ் அரங்கில் "வீரத்தளபதி" என்ற இவரின் நாட்டுக்கூத்து அரங்கேற்றப்பட்டு பலரின் பாராட்டுக்களைப் பெற்றிருக்கின்றது. இந்த நாட்டுக்கூத்து நூல் வடிவில் வெளிவரவேண்டும் என்ற நூலாசிரியரின் மன விருப்பும், இறுதி ஆசையும் தற்போது நிறைவேறியுள்ளது.

அமரர் எஸ்.தாக்கி வீரத்தளபதி நாட்டுக் கூத்து நூல் வடிவம் பெற்றுள்ளது. யாழ்.நாவாயூர் ஒன்றியத்தின் வெளியீடாகத் தற்போது இந்த நூல் வெளிவந்துள்ளது.

கத்தோலிக்க சமயம் சார்ந்த ஒரு நூலாக இந்த நூல் காணப்படுகின்றது. புனித செபஸ்தியாரின் பக்தி வரலாற்றை ஈழத்துக் கத்தோலிக்க புலவர்கள் பலர் கூத்து வடிவாக்கி மக்களுக்கு சமய போதனையை ஊட்டும் கருவியாகப் படைத்துள்ளனர். இந்த வரிசையில் கலைக்கவி எஸ். தாக்கி தமக்கே உரிய கற்பனை வளத்துடன் இந்தக் கலை விருந்தைப் படைத்திருக்கின்றார்.

முப்பத்தியிரண்டு நாடகக் காட்சிகள் கொண்டதாக அமைந்துள்ள இந்த நூலானது தென்மோடி இராகத்தில் படைக்கப்பட்ட பக்திப் பாடல்களாக அமைகின்றது.

செபஸ்தியின் மீது பழிகூறிய கோர் வீனனிடம் தீயோக்கிளேஸ் பழிக்குரிய ஆதாரங்களைத் தருமாறு வேண்டிநிற்கின்றான். அந்த நிலையில் செபஸ்தியின் வாய்மொழியாக வருகின்ற வார்த்தைகளைக் கவிஞர் பின்வரும் பாடல் அடிகளாகத் தருகின்றார்.

"ஆதாரம் வேண்டாமரசே கிறிஸ்தவன் நான் அறிவீர் - அந்த
ஓதரும் மகிமை நான்தான் தேடும் பாக்ய மறிவீர்"

இந்த வரிகளின் ஊடாகச் செபஸ்தியின் மன உறுதி விளக்கி நிற்கும் பாங்கைக் காணலாம். கிறிஸ்தவன் ஒருவரின் மன உறுதியும் கிறிஸ்தவன் என்று கூறுவதிலுள்ள பெருமிதத்தையும் கவிஞர் இந்த வரிகள் மூலம் விளக்கியுள்ளார்.

இவ்வாறே "வீரத்தளபதி" கூத்தில் இடம்பெறும் ஒவ்வொரு பாத்திரங்களின் தன்மையையும் நன்கு வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர் எஸ்.தாக்கி.

கவிஞர் எஸ்.தாக்கியின் இந்த வீரத்தளபதி என்ற கூத்துநூல் தற்போது நூல் வடிவில் வெளிவந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாக அமைந்தபோதிலும் அவர் எழுதி மேடையேற்றிய கூத்துக்களும், நாடகங்களும் புத்தக வடிவில் வெளிவராமல் இருப்பது கூத்துக் கலை தொடர்பான வளர்ச்சியில் அதன் பேணுகையில் சில அதிருப்தியையே தோற்றுவித்துள்ளது.

இந்த வகையில் எஸ்.தாக்கி எழுதி மேடையேற்றிய விசுவாமித்திரன், சோக்கிரட்டீஸ், சாம்ராட் அசோகன், ஏரோதியான் போன்ற உரைநாடகங்களும்,

ஞானசவுந்தரி, அந்தோனியார், எஸ்.தாக்கியார், தொம்மையப்பர், அலசு முழு இரவு நாட்டுக் கூத்துக்களும்,

கயிலை வன்னியன், பொறையின் நிறை, கண்டியரசன், மாதவன் தலை வாங்கிய மங்கை போன்ற மூன்றுமணிநேர நாட்டுக் கூத்துக்களும்,

அன்புள்ள அப்பா, நீதியின் நேர்மை, எல்லாளன், வெனிஸ் வர்த்தகன் போன்ற ஒருமணி நேர நாட்டுக் கூத்துக்களும்

என இவை நூல் வடிவு பெறவேண்டியது அவசியமாகும். கூத்துக் கலையை அழிவடையாமல் பாதுகாப்போரின் முக்கியமான பணியாக இவற்றை எழுத்துவடிவில் மேலும் நூல்களாக வெளிவரச் செய்தல் வேண்டும்.

**பூ.நகுலன்** B.A(Hons)

# நட்பு!

*நீண்ட பயணத்தில் விடப்பட்ட நட்பு மிகுதி நாள்களில் தொடர்கின்ற பயணத்தில் என்னுடன் நீ இருப்பதாக அறிகிறேன். என் வழி வாழ்வு, இயற்கை இவற்றோடு ஒட்டி இருந்து விட்டுச் சென்றுவிட்டாய். எனக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் உன்னைத் தெரிந்தபோது நான மறந்தாலும் ஏதாவது ஒரு உருவில் உன்னை அடையாளப் படுத்திக்கொண்டே இருக்கின்றது.*

*சுமையாக உயிர் உடலில் இருக்கின்றது, நினைவுகளாக உடல் உயிரில் இருக்கின்ற எல்லோரின் வாழ்விலேயும் நட்பு எப்படியெல்லாம் மாறுபடுகின்றது. விட்டுச் செல்லும் எச்சங்களுக்குள் உன்னை அடையாளப்படுத்திய இன்னொருவர் இருக்கும்வரை தொடர்கின்றது. நீ மட்டும் மாறுபட்டவனாக இருந்தால் என்னுடன் ஒத்துப் போக முடியாது.*

*நீலக் கடல்தாண்டி நீளப் பார்வையில் வானம் முடிவதுபோலும், சூரியன் ஒதுங்குகிறதுபோலும், தரைப் பார்வை உன் மீதும், என் மீதும் தெரிகின்[illegible] விழுதுகளின் கீழ் பாடம் படித்து, பிடித்து ஏறும்போது சறுக்கி விழும் அன்றைய முதலாம் வகுப்பு நாளில் இருந்து பிடித்துக்கொண்டுதான் இருக்கின்றோம். ஏறவும் இல்லை, இறங்கவும் இல்லை, சறுக்கவும் இல்லை. இப்படியான உறவுகளில் நகர்வு உனக்கும் எனக்கும் அந்தந்தக் காலப்பகுதியில் மாற்றம் காணாதபோது மட்டும் நட்பு நிலைத்திருக்கின்றது.*

*எப்படியெல்லாம் சந்திப்புகள், எந்த இடங்களானால் என்ன, விடுபட்டுக் கொண்டிருக்கும் நாட்களுக்குள் தூரச்சென்று பிரிவுபடப் பார்க்கின்றோம். சந்தர்ப்பம், சூழ்நிலைகள் கண்டிப்பாக உன்னையும் என்னையும் பிரித்துவிடும் என்ற நம்பிக்கையில்லாமல் இருக்கும்போது ஒவ்வொரு நாளும் உன்னைப் பார்க்காமல் இருக்கவும் முடியாது.*

*திருப்தியான வாழ்வுக்கு வழிகாட்டிய நட்பு-திருப்பத்தில்கூட சேர்ந்துவந்து உரிமை கொள்ளாது. சேர்ந்துநின்று இரு தண்டவாளத்தில் பல பெட்டிகளோடு ஒரு புகைவண்டியாக ஓடிக்கொண்டிருக்கும்போது, யாரும் ஏறலாம், இறங்கலாம். ஆனால் தொடக்கத்தில் ஏறி முடிவில் இறங்குபவர்கள் குறைவாகத்தான் இருக்கின்றார்கள். இதற்குள் உன்னையும் என்னையும் தேர்ந்தெடுத்த இந்த நட்பு மகத்தானதுதான்.*

*விடைபெறும் நாள் தெரியாது. சேர்ந்த நாளும் தெரியாது. ஞாபகம் ஊட்டுவதாக சில, சின்ன வயதில் ஐஸ்பழம் கொண்டுவந்த சைக்கிள்காரனுக்குப் பின்னால் நானும் நீயும் சேர்நது ஓடியது. ஒவ்வொரு நாளும் பள்ளியில் ஆசிரியரிடமும், வீட்டில் அம்மாவிடமும் அடி வாங்குவது. ஒரு குண்டுப் பெடியனுக்குச் சேர்ந்து அடித்தது. வீட்டில் இருந்து கள்ளக் களவாய் தூளும் உப்பும் கொண்டுவந்து குளக்கட்டில் இருந்து மாங்காய் கடித்தது. நீயும் உன்னை, நானும் என்னை உணர்ந்தபோது மாறிய பல மாற்றங்களுக்குள் இன்றுவரை நட்பு மட்டும் மாறவில்லை.*



*அந்தந்தக் காலப்பகுதியில் வெற்றிடங்களில்லாமல் திருப்திகொண்டு ஆறுதல் அடையும்போது நட்பில் நகரும் வாழ்நாள் எல்லோருக்கும் வாய்த்திருக்கும்போது அணை மீறி கலிங்குபாயும் மதகுபோல அழகாக நீர் வழிந்தோடும்போது மட்டும் மதகின் அருமை தெரிவதுபோல உணரும் தன்மை நிகழாமல் வாய்த்திருத்தல் எப்படி ஏற்படுகின்றது.*

*நீ நுழைந்த பல உறவுக்குள் பிடிப்பில்லாதது தெரிந்தவுடனே விலகிக்கொண்டபோது முழுமையான, கலங்கப்படாத ஊர்க்குளத்தில் வானம் தெரிவதுபோல் அடங்கியதால் பெரிதாக எதுவும் தெரியவில்லை.*

*எனக்கும் உனக்குமான நட்பில் எந்தவித இடைவெளியும் கிடையாது. ஆனால் இந்த இடைவெளிக்குள் நிறைய புதிய முகங்களைச் சந்திக்க வேண்டிவரும். அதற்குள் வேறுபட்டவனிடம் இருந்து நீ உன்னை விடுவிப்பது தூரப்பார்வையில் எம் கண்ணுக்குத் தெரியும் கானல் நீர் வெய்யிலில் மட்டும் தெரிவதுபோல, பக்கத்தில் தெரியும் உன் உருவம் காட்டும் நிழல்போல உன்னை அவனுக்கும், என்னை அவனுக்கும் தெரியப்படுத்துவது, பிரிவு இல்லாத சூழலில் யாருடனும் பகையில்லாமல் வாழக்கூடியதாக இருக்கின்றது.*

*இதற்குள் முழுமையாக நம்பமுடியாத இந்த நட்பு முழுமையில்லாமல் தொடர்வது தான் ஆச்சரியமாக இருக்கின்றது. ஆனாலும், எங்கு சென்றாலும் கடல் கடந்தாலும் தொடர்போடு வானம் அதன் முகவரி தெரியப்படுத்துகின்றது.*

***-செல்வா-***

# வந்ததும் வராததும்!






பத்திரிகை முகத்தில் பலி என்ற தார்ப்பூச்சு
அச்சறுக்கையாக அடைபட்ட வேலிகளில்
பச்சோந்திச் செதில்கள்
பாம்புகளின் கோவணங்கள்

விளக்குத் தலையோடு வீதிகளில் அணிவகுத்த
தூக்குமரங்களிலே தொடுத்த சணற்கயிற்றில்
தூக்குக் கிழிபட்ட தென்னங்குரத்துக்களாய்
காரணம் தெரியாமல் காற்றூஞ்சல் ஆடுகின்ற
தோரணப் பிணங்கள்

சில்வண்டும் ஷெல்வண்டும் சீழ்க்கை அடித்திருக்க
நள்ளிரவின் கற்பை நாய்கள் துகிலுரியும்

அன்றாடம் எங்கள் அலைமடியில் அவர்களுடை
அனுமதிகள்
இன்றி வருவதனால்
இடுப்பொடிந்து மேற்றிலையில்
குருதித் திட்டாகிக் கதிர் குலையும் பின் நடக்கும்
இரவின் விசாரணை இம்சையினை தாங்காமல்
நிலவை மலங்கழிக்கும் எம் கதிரோன் நெடிலகண்டு
பலகோடி விண் ஈக்கள் மொய்க்கின்ற ராத்திரிகள்

ஊரடங்கு சப்பிய ஊனப் பகல்கள்
மாரி மடைதிறந்து வழிந்தாலும் மரங்களுடை
வேர்களுக்குள் எப்பொழுதும் வெம்மைப் பெருமூச்சு
காரணம் கேட்டதனால் கழுத்து முறிபட்ட
ஊர்வடலி காற்றும் ஊன்றுகொல் தாங்கி
ஓரமாய் வீசுது

நேற்றுவரை இதுவே நிஜயம் ஆனால் மீண்டுமொரு
மாற்று மருந்தோடு மாருதிகள் வருகின்றார்
பொட்டல் வெளிகளிலே போட்ட பனம்பாத்தித்
திட்டுக்களில் நாளை அமைதிமழைத் துவாணம்
தட்டுமென்று காற்றோ குடுகுடுப்பைக் காரனைப்போல்
விட்டுவிட்டுப் பேசுது
என்றாலும் வியர்க்கிறது.

- ச.முகுந்தன்

# தாய் மண் அழைப்பு



பேய் மண் எனக்கூறி
பிரிந்தகன்ற உறவுகளைத்
தாய்மண் அழைக்கிறது
தன் உறவாய் நினைக்கிறது

செல்லால் அடிபட்டுக்
கல்லாய் உடைபட்டு
இல்லாரின் நினைவோடு
இன்னும் பலவீடு!

நெல்லால் நிறைந்த வயல்
நித்தம் விளைந்த நிலம்
புல்லால் நிறைந்து
புதர்புற்றாய்க் கிடக்கிறது

தோட்ட நிலம் முன்னின்
சொர்க்கப் பதியாகி
தேட்ட நிலையின்றித்
தேம்பி அழுகிறது!

வள்ளம் கடல் சென்று
வீசும் வலைவாரி
அள்ளும் நிலையன்று!
இல்லை எமக்கின்று!

பள்ளம் சிறுகுட்டை
பாயின் மரம்சென்று
கிள்ளும் நிலைமட்டும்
கிட்டும் எமக்கின்று!

செல்வச் செழிப்போடு
சீராய் வதிந்தவர்கள்
கல்விப் பரம்பரையில்
கற்றுத் தெளிந்தவர்கள்

இல்லை இவர் தொல்லை
இங்கே எனச் சொல்லி
எல்லைக் கடல் தாண்டி
எங்கோ உறைகின்றார்

கள்வர் கயவர்தினம்
காட்டும் இழிசெயலால்
உள்ளம் பதைத்திடவோ
வீட்டில் உறைகிறது

சண்டித் தனச்செருக்கால்
சந்தி நிறைகிறது
மண்டிக் கிடக்குமிருள்
மாற மறுக்கிறது

வாட்ட நிலையோட்டி
வாழும் நிலைகாட்ட
நாட்டம் உடையவுளம்
நீட்டும் கரம் மீண்டும்!

பேய்மண் எனக் கூறி
பிரிந்தகன்ற உறவுகளை
தாய்மண் அழைக்கிறது
தன் உறவாய் நினைக்கிறது.

- நா.ரவிச்சந்திரன்

# காவற்துறையின் போக்குவரத்துப் பிரிவினால் வீதி ஒழுங்கை கடைப்பிடிக்குமாறு கோரிக்கை

தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவினரால் சைக்கிளில் செல்வோருககு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அண்மைக் காலத்தில் ஏ-9 பிரதான வீதியில் ஏற்படும் விபத்துக்களில் சைக்கிளில் செல்வோர் சிக்குண்டு உயிரிழப்பு, உடமை இழப்பு என்பன ஏற்பட நேருகின்றது.

இந்த விபத்துக்களை தவிர்ப்பதற்காக நாம் உங்களை காப்பாற்றும் பணியில், இரவு பகலாக கடமை செய்வதை அறிவீர்கள்.

இந்த விபத்துக்கள் நடைபெறுவதற்கு காரணம் ஏ-9 பிரதான வீதி அகலம் குறைவாக இருப்பதால், வீதியால் வரும் பல ஆயிரக்கணக்கான வாகனங்களின் வேகமும் அதிகமாகவிருக்கிறது..

இந்த விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு சைக்கிள்களில் செல்பவர்கள் வீதியின் விதிமுறைகளைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும். சைக்கிளில் செல்லும் போது வீதியின் இடது பக்கமாக செலுத்துதல் வேண்டும். முந்திச் செல்லும் போது வலது பக்கமாக முந்திச் செல்லுதல் வேண்டும்.

இதேபோன்று இடது பக்கமாக செல்லும் போது தாங்கள் வீதியின் தார் விளிம்பிலிருந்து ஒரு அடிக்குள் செலுத்துதல் வேண்டும்.

சைக்கிளை செலுத்தும் போது இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ பக்கம் பக்கமாக செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். வீதியில் ஓடிக்கொண்டிருக்கும் வாகனங்களையோ அல்லது இன்னொரு சைக்கிளையோ பிடித்துக்கொண்டு செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

கிளை வீதியிலிருந்து பிரதான வீதிக்கு நுழையும் போது சைக்கிளை கிளை வீதியில் நிறுத்தி பிரதான வீதியில் வலதுபக்கம் இருந்து வரும் வாகனத்தையும் இடதுபக்கம் இருந்து வரும் வாகனத்தையும் செல்ல அனுமதித்தபின் சைக்கிளை பிரதான வீதிக் குள் இடையூறு இன்றி வீதியின் விதி முறைக்கேற்ப செலுத்துதல் வேண்டும்.

பிரதான வீதியிலிருந்து கிளை வீதிக்கோ அல்லது கிளை வீதியிலிருந்து பிரதான வீதிக்கோ செல்லும் போது செல்லும் திசைக்கேற்ப 100 அடிக்கு முன் சைகையைத் தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

இரவு நேரங்களில் சைக்கிளை செலுத்தும் போது முன் பக்கத்தில் வெள்ளை நிற வெளிச்சத்தையும் பின் பக்கத்தில் சிவப்பு நிற வெளிச்சத்தையும் அல்லது சிவப்பு நிற தெறிகல்லையும் பாவித்தல் வேண்டும்.

அத்துடன் முறையான கட்டுப்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் பொருட்களை ஏற்றிச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். மது அருந்திவிட்டு செலுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும் எனவும், இவற்றை கடைப்பிடிக்குமாறு தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## குளங்களின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது

(கிளிநொச்சி)

அண்மையில் பெய்துவரும் மழையை அடுத்து வன்னியின் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய குளங்களின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் 15 அடி 5 அங்குலமாகவும், அக்கராயன் குளத்தின் நீர்மட்டம் 11 அடி 10 அங்குலமாகவும், கனகாம்பிக்கைக்குளத்தின் நீர்மட்டம் 6 அடி 2 அங்குலமாகவும், கல்மடு குளத்தின் நீர்மட்டம் 11 அடியாகவும், வன்னேரிக் குளத்தின் நீர்மட்டம் 9 அடி 9 அங்குலமாகவும், பிரமந்தனாறு குளத்தின் நீர்மட்டம் 4 அடி 3 அங்குலமாகவும், புதுமுறிப்பு குளத்தின் நீர்மட்டம் 4 அடி 6 அங்குலமாகவும், ஆனைவிழுந்தான் குளத்தின் நீர்மட்டம் 10 அங்குலமாகவும் உயர்ந்துள்ளது.

## தொழில் நுட்பக் கல்லூரிக்கு பொருட்கள் அன்பளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்லூரிக்கென உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தால் 3 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனங்கள், உபகரணங்கள் போன்றவற்றை வழங்கியுள்ளது.

இந்தச் சேவை நிறுவனத்தின் நிதியுதவியுடன் தொழில்நுட்பக் கல்லூரியுடன் இணைந்து தொழில்சார் பயிற்சிகளை வழங்கும் நோக்குடனேயே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதில் தொலைக்காட்சி, வானொலி, 2 ஒட்டோக்கள், உழவு இயந்திரம் ஆகியவற்றுடன் திருத்துதல் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.



## வன்னிப் பதிவுகள்

### போக்குவரத்துத் தடை

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் கடந்த சில நாட்களில் பெய்துவரும் கடும் மழை காரணமாக முக்கிய வீதிகளின் மதகுகளை மூடி வெள்ளம் பாய்வதைக் காணமுடிகிறது.

இதேவேளை புதுக்குடியிருப்பு கேப்பாப்புலவு பாலத்தின் அருகே லொறியொன்று புதைந்ததால் சில மணித்தியாலயங்கள் இந்த வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

### கலந்துரையாடல்

1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி விடுலைப்புலிகளால் பூநகரி நாகதேவன்துறை இராணுவ கடற்படை கூட்டுப்படைத்தளம் வெற்றி கொள்ளப்பட்டதன் 11 ஆம் ஆண்டு நிறைவுவிழா நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்று மாலை 3 மணிக்கு பூநகரி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

அத்தோடு, பூநகரி வேராவில் இந்து மகாவித்தியாலய மண்டபத்தில் இன்று மாலை 3 மணிக்கு மாவீரர்நாள் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

# கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவையின் பிரதிநிதிகளுக்கான சங்கம நிகழ்வு

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு- கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் ஏ.வி.கே.மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சி பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் எதிர்வரும் மாவீரர் நாள் தொடர்பான வேலைத்திட்டங்கள் மற்றும் பொது வேலைத்திட்டம் தொடர்பாகக் கருத்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் கோட்ட, ஊரக தேசிய எழுச்சி பேரவையைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# முள்ளியவளை தேசிய எழுச்சிப்பேரவையின் கிளை உறுப்பினர்களுக்கான சங்கம நிகழ்வு

(முள்ளியவளை)

முள்ளியவளைக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைகளின் ஊரகக் கிளை உறுப்பினர்களுக்கான சங்கம நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு முள்ளியவளை மாவீரர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முள்ளியவளை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் க.தியாகராசா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை முள்ளியவளை காவற்துறைப் பணிமனைப் பொறுப்பாளர் கை.கணேசமூர்த்தி ஏற்றி வைத்தார். தொடர்ந்து முள்ளியவளை கலைமகள் வித்தியாலய மாணவிகளின் கொடி வணக்கப்பாடல் இசைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசிய கொடியை முள்ளியவளை - புதுக்குயிருப்பு கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பிறையாளன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மாவீரர்களின் உருவப்படத்துக்கு ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து அகவணக்கம் நிகழ்த்தப்பட்டது.

அடுத்து சமகால நிலைப்பாடு தொடர்பாகவும், தேசிய எழுச்சிப் பேரவைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகள் தொடர்பாகவும், எதிர்வரும் மாவீரர் நாள் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும், முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் வேழினி, முள்ளியவளை காவற்துறைப் பணிமனைப் பொறுப்பாளர் கை.கணேசமூர்த்தி, முல்லைத்தீவு பொருளாதார அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சுரேஸ், தமிழீழ திரைப்பட உருவாக்க பிரிவுப் பொறுப்பாளர் சங்கர், முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல அபிவிருத்தி குழுத் தலைவர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர்.



இந்த மாதம் திறந்து வைக்கப்படவுள்ள கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுமண்டபத்தை படத்தில் காணலாம்.

படம்: சு.பாஸ்கரன்



கிளிநொச்சி சுகுணா கடைச் சந்தியிலிருந்து இராமநாதபுரம் செல்லும் மாவடி அம்மன் கோவில் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதைப் படத்தில் காணலாம்.

படம்: வட்டக்கச்சி செய்தியாளர்

# கடந்த மாதங்களில் ஏற்பட்ட விபத்துக்களில் கிளிநொச்சியில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி பத்துப் பேர் உயிரிழந்துள்ளனர் என, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் இந்த மாவட்டத்தில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவற்றைவிட வீதி விபத்துக்களில் சிக்கி வெளிநோயாளர் பிரிவில் 1246 பேரும் விடுதிகளில் தங்கி, 207 பேரும் சிகிச்சை பெற்றனர். வீதி விபத்துக்களில் சிக்கி மேலதிக சிகிச்சைக்காக 79 பேர் வேறு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், இவர்களில் நான்கு பேர் உயிரிழந்தனர். சம்பவ இடத்தில் அல்லது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ஆறு பேர் உயிரிழந்தனர் என புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

அத்தோடு, புளியங்குளம் முதல் முகமாலை வரையான ஏ-9 வீதி புனரமைப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் பாடசாலைகள், பொது இடங்கள் ஆகியவற்றின் முன்னால் பாதசாரிகளுக்கான கடவைகள் அமைக்கப்படாமையால் விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

இதைவிட மஞ்சள் கோடுகள் தெளிவாக இடப்பாடமை போன்ற காரணங்களால் வீதி விபத்துக்கள் நிகழும் அபாய நிலை காணப்படுகின்றது.

# அபிவிருத்தி வேலைகள் தொடர்பான உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக கிராம அபிவிருத்தி சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் நிர்வாக சபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடல்- கடந்த புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சுபாஜினி கந்தையா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு நியாப் பிரதி திட்டப்பணிப்பாளர் சி.சிவகுமார், நியாப் திட்ட வேலைகள் தொடர்பாக கருத்துரைகளை வழங்கினார். கிராம மட்ட அமைப்புக்களின் முல்லைத்தீவு மாவட்ட பொறுப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூக வலுவூட்டல் பகுதி அலுவலர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக நிர்வாக அலுவலர், ஒட்டுசுட்டான் பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இந்த நிகழ்வில் சங்கத்தின் உறுப்பினர்கள் தமது கருத்துக்களை தெரிவித்ததுடன், பல கோரிக்கைகளையும் முன்வைத்தனர். இதில் 70 உறுப்பினர்களும் கலந்து கொண்ட னர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கொன்று அன்ன இன்னா செயினும் அவர் செய்த*
*ஒன்று நன்றுஉள்ளக் கெடும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## வெளிப்படையாகிவரும் உள்ளக முரண்பாடுகள்

கடந்த பொதுத்தேர்தலின்போது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டமைப்பை - சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியினரும் பல்வேறு கருத்து மற்றும் கொள்கைரீதியான முரண்நிலைகளுள், மேற்கொள்வதற்கான உடன்பாட்டை எட்டியபொழுது, கொழும்பில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளில் ஒன்று பின்குறிப்பிட்டுள்ளவாறு கோஷமொன்றை எழுப்பியது.

முரண் நிலையாளர்களின் கூட்டு

தேசிய நலன்களுக்கு வேட்டு - என்ற அந்தக் கோஷம் உண்மையில் சிந்திக்கவேண்டிய ஆழமான உண்மையொன்றை வலியுறுத்துகின்றது என்பதை தென்பகுதி மக்கள் அப்போது உரியமுறையில் உணர்ந்துகொள்ளத்தவறிய தன் விளைவையே இப்போது எதிர்கொள்ளவேண்டியவர்களாகியுள்ளனர்.

சுமார் இருதசாப்தகால கடுமையான யுத்தத்தின் பின்னர், எவ்வளவோ இன்னல்கள், இழப்புக்கள் அவலங்களுக்கு அப்பால் அமைதிக்கான தளமொன்றினை இறுக்கமாக அமைத்து - சமாதான முன்நகர்வு முயற்சிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்வதற்கான வாய்ப்பான சூழ்நிலை கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில் உருவானபோது, அதனை ஜனாதிபதியாலும் ஏனைய பேரினவாத அமைப்புக்களாலும் ஏற்றுக்கொள்ள முடியாது போனதில் வியப்பில்லை.

சமாதானத்துக்கான யுத்தப்பிரியர்களுக்கு –சமாதானத்துக்காக சமாதானமாக இயங்கமுடியாதிருப்பது ஆச்சரியம் தரும் விடயமல்ல...! எனவே சமாதானத்தையும், அதனை முன்னெடுக்க முனைந்த ரணில் தலைமையிலான அரசையும் வெளிப்படையாக எதிர்க்கும் ஒரே நோக்குடன் ஏனைய ஏராளமான பகைமுரண்பாடுகளை ஒரு புறம் ஒதுக்கிவைத்து விட்டு, தேசிய நலனைப் புறந்தள்ளி அற்பத்தனமான அரசியல் சுயநலத்துடன் ஜனாதிபதியின் கட்சியினரும், ஜே.பி.யினரும் கூட்டுச்சேர்ந்தபோது தங்களுக்கு இவ்வளவு விரைவில் விரிசல் நிலைமை உருவாகும் என்று இருதரப்பினரும் நினைத்துப் பார்த்திருக்கவேமாட்டார்கள்.

ஒருவரை மற்றவர் அவரவர் அரசியல் நலன்களுக்கேற்ப காய் நகர்த்தல்களை மேற்கொண்டு ஏமாற்றி, அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றேஅவர்கள் எண்ணியிருக்க வேண்டும்.

நேர்மையற்றோரின், ஒருவரை மற்றவர் தத்தமக்கு ஏற்ற வகையில் பயன்படுத்த முனையும் உள்நோக்கத்துடன் கூடியதனை உறவுகள் ஒருபோதுமே பொதுநலனை அடிப்படையாகக்கொண்ட பிரச்சினைகளில் தேசிய நலனைக் கருத்திற் கொண்டுகூட மனோதர்மத்துடன் ஒருங்கிணைந்து செயற்படப்போவதில்லை என்ற உண்மையானது, ஜனாதிபதி - ஜே.வி.பியினர் சம்பந்தப்பட்ட அரசியல் உறவின் மூலம் உறுதியாகியுள்ளது என்றே கூறவேண்டும். கடந்த சிலநாட்களாக அரசின் கூட்டாளிப் பிரதான கட்சியினருக்கிடையே நிகழும் வெளிப்படையானதும், கீழ்த்தரமானதும்,அரசியல் அநாகரீகத்தன்மை கொண்டதுமான, கருத்தியல் மோதல்கள் இலங்கையின் அவலங்களுக்கெல்லாம் காரணம் எதுவென்பதை சர்வதேச சமூகத்திற்கு வெளிச்சம் போட்டுக்காட்டத்தொடங்கியுள்ளது.

பதவிவெறி, அதிகாரவெறி, மேலாதிக்க சிந்தனை, ஆகியவற்றின் மொத்த உருவங்களாகத் திகழும் சிங்களப் பேரினவாதிகள், தத்தமக்குள்ளேயே ஒரு இணக்கப்பாட்டைக் கடைப்பிடிக்கமுடியாது வாய்ச்சமரில் இறங்கி ஒருவரோடு ஒருவர் தெருச்சண்டியர்கள்போல் நடந்து கொள்கிறார்கள் என்றால்– அவர்களால் இனப்பிரச்சினைக்கு ஒருமைப்பட்டு ஒன்றாக இயங்கிஒரு தீர்வுகாணும் முயற்சிக்கு தம்மைத் விசுவாசமாக அர்ப்பணித்து செயற்படமுடியும் என எப்படி நம்பமுடியும்?

அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்குமிடையேயான போர் நிறுத்த உடன்பாடு கடந்த மூன்றாண்டு காலமாக நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கடைப்பிடிக்கப்படுவதை கருத்திற்கொண்டு பார்க்கும்போது, பேரினவாதிகளிடையேயான மேலாதிக்க நோக்கிலான கருத்தியல் யுத்தம் இந்த ஐந்து மாதகாலத்தில் உடன்பாடு காணமுடியாத அளவுக்கு வேகமாக அதிகரித்து விட்டது என்றே கூறவேண்டும்.

இந்தக் கருத்தியல் யுத்தமே எதிர்கால சமாதான முயற்சிகளுக்கு நிரந்தர இடையூறாக இருக்கப்போகிறது.

ஜே.வி.பியினரின் கருத்துக்கள் மிகவும் முட்டாள்த்தனமானவை ஒரு கூட்டணியில் அங்கம்வகிக்கும் கட்சிக்குத் தேவையான ஆகக்குறைந்த தகுதியைக்கூட கொண்டிராத கீழ்த்தரமான நிலையிலேயே ஜே.வி.பி. உள்ளது என ஜனாதிபதி கூறியிருப்பதுடன், கடந்தகாலத்தில் பயங்கரவாதத்தை தங்களது அதிகார ஆயுதமாகப் பயன்படுத்திய அவர்களை தனது கூட்டணியில் சேர்த்துக் கொண்டதன் மூலம் அரசியல் சுகங்களை அனுபவிக்கச் செய்துள்ளேன் என்ற ஜனாதிபதியின் கூற்றை பயங்கரவாதம் பற்றி பெரிதும் கவலைப்படும் மேலாதிக்க மற்றும் வல்லாதிக்க நாடுகள் கவனத்தில் கொள்ளவேண்டியதுஅவசியமாகும்.

இது இன்றைய அரசு பயங்கரவாதிகளுடன் கூட்டணி சேர்ந்துள்ளதை ஏற்றுக்கொள்ளும் ஒப்புதல் வாக்குமூலமாகும்.

சரி, இனி ஜனாதிபதி என்ன செய்யப்போகிறார் என்பதே கேள்வி கூட்டணியைத் தொடரப் போகிறாரா? ஆட்சியைக் கலைக்கப் போகிறாரா? இந்தக் கேள்விக்கான பதிலை அவர்தான் கூறவேண்டும். அதுவும் தேசிய நலன்கருதி சமாதானத்தின் பேரால் சொல்லவேண்டும். சொல்வாரா?

## நாடும் நடப்பும்




செய்தி :-
சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும், அதன் தலைமையையும் பொதுஇடங்களில் கேவலமாக விமர்சிப்பதை உடன் நிறுத்துமாறு ஜே.வி.பியினருக்கு ஜனாதிபதி கடும் எச்சரிக்கை..

# யாழ்.குடாநாட்டு வீதிவிபத்துக்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் காரணம்

## மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் குற்றச்சாட்டு

யாழ். குடாநாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கு வீதிகளும் காரணமாக அமைகின்றன. இதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையே காரணம். இதற்கான தகுந்த நடவடிக்கை ஒன்றை அவர்கள் மேற்கொள்ளவேண்டுமென, மனித உரிமை ஆணைக்குழு வட.- கிழக்கு ஆணையாளர் என்.செல்வக்குமரன் தெரிவித்தார்.

நேற்று யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

நான் இங்கு யுனிசெவ், யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினேன். இவர்களின் கருத்துப் படி- மற்றைய இடங்களைவிட, யாழ்.குடாநாட்டில் படையினர் மற்றும் புலிகளின் செயற்பாடுகளும் சிறப்பாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கின்றனர்.

அரச அலுவலகங்கள் மனித உரிமைகளை மீறுவார்களாயின், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். எனினும், மனித உரிமை ஆணைக்குழு சட்டத்தைக் கையில் எடுக்க முடியாது. நான் புலன் விசாரணைக்குப் பொறுப்பாக இருக்கிறேன். யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் தாக்கப்பட்டமை தொடர்பாக, எம்மால் எந்த வகையான நடவடிக்கை எடுக்க முடியுமோ அதனை மேற்கொண்டுள்ளோம்.

யாழ்.குடாநாட்டில் பொலிஸ் விடயத்தில் தென்னிலங்கையில் இருந்து மக்களுக்கும், அரச அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகின்ற கடிதத்தில் மொழிப் பிரச்சினை இருக்கிறது எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிக்கலைக் குறுகிய காலத்தில் தீர்க்க முடியாது. ஆனால், மும்மொழிச் சட்டத்தை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். மும்மொழிச் சட்டத்தைக் கடைப்பிடிக்காதவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என அரசசபை மொழி ஆணையாளர் தெரிவித்தார்.

நான் அறிந்தவரை யாழ்.குடாநாட்டில் தற்போது மொழி உரிமை தொடர்பான மீறல்களும், உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைகளும், கலாசார சீரழிவுகள் போன்றனவும், சிறு சிறு வன்முறைகளும் நடைபெறுவதாக அறிந்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சமாதானத்தை வலியுறுத்தி மாணவர்களிடையே போட்டிகள்

சமாதானத்தை வலியுறுத்திப் பாடசாலை மாணவர்களுக்கிடையே சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் கட்டுரை, கவிதை, ஓவியம், பேச்சுப் போட்டிக்களை நடத்தவுள்ளனர்.

எனவே, பாடசாலைகளிலிருந்து இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்களது பெயர், விபரங்களையும் அவர்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தையும் இந்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளனர்.

போட்டியானது - கீழ்ப்பிரிவு (9,10,11), மேற்பிரிவு - (க.பொ.த.உயர்தரம்) என இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும். பாடசாலை ரீதியான போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கான போட்டிகள் கோட்ட மட்டத்திலும், பின்னர் வலய மட்டத்திலும் நடத்தப்படும். விடயத் தலைப்புக்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

## செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் தீவகத்தில் மருத்துவ சேவை

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தால் பிரதி செவ்வாய்க்கிழமைகளில் காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் மண்டபத்திலும், வியாழக்கிழமை காலை புளியங்கூடல் கிராம சேவகர் அலுவலர் அலுவலகத்திலும், வியாழக்கிழமை பிற்பகல் ஊர்காவற்துறை மெலிஞ்சிமுனை பாலர் பாடசாலை மண்டபத்திலும் இலவச மருத்துவப் பரிசோதனையும், இலவச மருந்து வழங்கலும் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த இலவச மருத்துவ சேவையை காரைநகர், ஊர்காவற்துறை நோயாளர்கள் உரிய முறையில் பயன்படுத்துமாறும், இந்தத் தினங்களில் காலை மருத்துவ சேவை 9 மணிக்கும், பிற்பகல் மருத்துவசேவை 1 மணிக்கும் ஆரம்பிக்கப்படுகிறது. தொடர்ந்து இந்தத் தினங்களில் நடைபெறும் மருத்துவசேவை, அடுத்துவரும் 6 மாதங்களுக்குத் தொடர்ந்து செயற்படும் எனவும் ஊர்காவற்துறைப் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் சோ.விக்னேஸ்வரன் தெரியப்படுத்தியுள்ளார்.

# ஐ.நா.செயலர் பதவிக்கு இலங்கையும் போட்டி

2006 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் புதிய செயலாளர் நாயகம் தெரிவுப் போட்டியில் இலங்கையின் பிரதிநிதி ஒருவரை நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி மாளிகைச் செய்தி தெரிவிக்கிறது.

ஆனால், இலங்கையில் நிறுத்தப்படவுள்ள பிரதிநிதி யார் என்பது இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

இது குறித்து, கடந்த சில வாரங்களாக ஜனாதிபதி தனது சிரேஷ்ட ஆலோசகர்களுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ள அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலாளர் றிச்சட் ஆர் மிரேஜுக்கும் இது குறித்துத் தெரியப்படுத்தி, அமெரிக்காவின் ஆதரவையும் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாளை இந்தியாவுக்குப் பயணமாகவுள்ள ஜனாதிபதி சந்திரிகா - இது குறித்து இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் உட்பட மேற்குலக நாடுகள் பல இலங்கைக்கு ஆதரவு வழங்குவதாக உத்தியோகப்பற்றற்ற முறையில் உறுதியளித்துள்ளன.

## திருமண மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது

கட்டப்பிராய் முத்துமாரி அம்பாள் கோவிலுக்குப் புதிய திருமண மண்டபம் அமைக்கப்படவுள்ளது.புதிய மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

அடிக்கல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நாட்டினார். இந்த மண்டபத்துக்கான நிதியுதவி வெளிநாட்டில் வாழும் அடியார் ஒருவரால் வழங்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (08)

அரசியல் - எஸ்.எம்.ஜி

# தலைவர் பிரபாவை கொல்ல திட்டமிடும் சதிக் கும்பல்கள்!

**இந்திய உளவுப்படைகளின் பகுப்பாய்வுப் பிரிவான றோ 1980 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியிலிருந்து தலைவர் பிரபாகரனை ஒழித்துக் கட்டக்குறிவைத்திருப்பதாக சம்பிக்க லியனாராச்சி என்ற ஒரு இனவெறியர் டெய்லி மிரர் என்ற ஆங்கிலத் தினசரியில் மிகக் கொடூரமான ஒரு கட்டுரையை 27-10-2004 இதழில் எழுதியிருக்கிறார். ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ போன்ற கட்சிகளின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் தலைவர் பிரபாவை ஒழித்துக் கட்டும் கருணாவின் முடிவுக்கு உடந்தையாக இருப்பதாகவும் சம்பிக்க எழுதுகின்றார்.**

**சம்பிக்க போன்ற சிங்கள இனவெறியர்களுக்கு தமிழ் மக்களையும், தமிழ்மண்ணையும் பாதுகாக்கும் தலைவர் பிரபாவையும், விடுதலைப் புலிகளையும் பிடிக்காதென்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் தமிழரென நாமமது கொண்டு இங்கு வாழும் சில தமிழர்கள் இவர்கள் பின்னால் வாலாட்டிக் கொண்டு திரிவது தான் புரிந்து கொள்ள முடியவில்லை.**

**இது ஒரு புறமிருக்க தமிழ் மக்களின் அன்புக்கும், பாசத்திற்குமுரிய செயல்வீரன் தலைவர் பிரபாகரனை ஒழித்துக் கட்டுவதற்கான சதி நடவடிக்கைகள் சம்பிக்கலியனாராட்சிக்குத் தெரிந்திருக்கிறது.**

**ஒரு இனத்தின் தலைவனைக் கொலை செய்யச் சதி செய்யும் கும்பல் பற்றி பொறுப்புள்ள அரசு லியனாராச்சியை விசாரணை செய்து உண்மையைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமல்லவா? இல்லையேல் சிங்களவர்களின் அரசியல் தலைவர்களுக்கும் சதித்திட்டம் தீட்ட நேரீடுமல்லவா?**

## உண்மையறிய சிங்களக் கட்டுரையாளரை விசாரணை செய்ய வேண்டும்.



**1956 ஆம்** ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டுவரை ஆட்சியதிகாரத்திலிருந்தவர்களின் ஆசியுடனும் அனுசரணையுடனும் சிங்களப் பேரினவாதிகள் தமிழ்மக்களுக்கெதிராக இனக்கலவரங்களைத் தூண்டிவிட்டு தமிழ் இனத்தை அழிப்பதற்குத் திட்டமிட்டுச் செயல்பட்டனர்.

உணவில் தன்னிறைவு என்று கூறி வெள்ளையர் வெளியேறிய பின் ஐக்கிய இலங்கை என்ற பெயரில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தைத் தொடங்கி வைத்தார்.

இலங்கை சுதந்திரமடைந்த 1948 ஆம் ஆண்டில் நூறு குடும்பங்கள் கூட வசிக்காத கிழக்கிலங்கையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால் இன்று இரண்டுக்கு மேற்பட்ட சிங்களப் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

கிழக்கில் தமிழ் மண் அபகரிப்பை டி.எஸ் தொடங்கி வைக்க தொடர்ந்து வந்த சந்திரிகாவின் தகப்பன் எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா சிங்களம் மட்டுமே நாட்டின் அரசகரும மொழி என்று தமிழ் மொழி ஒழிப்புக்கு வழி கோலினார்.

சிங்களம் மட்டும் சட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் வேலை வாய்ப்பு பறிக்கப்பட்டது.

இதன்பின் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்காவின் மனைவியும், சந்திரிகாவின் அம்மாவுமான சிறிமா பண்டாரநாயக்கா தமிழ் இளைஞர்கள் உயர் கல்வி பெறும் வாய்ப்புக்கு தரப்படுத்தல், என்ற திட்டத்தைக் கொண்டு வந்து வேட்டுவைத்தார்.

இதனால் சிங்களச் சட்டத்தினால் வேலை வாய்ப்பை இழந்த தமிழ் இளைஞர்கள் வெளிநாடுகளில் உயர் கல்வி பெறவும் வேலை வாய்ப்புப் பெறவும் வசதியும் வாய்ப்பும் மறுக்கப்பட்டது.

சிங்களச் சட்டத்தினாலும் தரப்படுத்திலினாலும் அரசாங்க வேலை வாய்ப்புக்களையும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களையும் இழந்த தமிழ் இளைஞர்கள் கிழக்கில் நிலத்தையும் பெருமளவில் பறிகொடுத்த நிலையில் வடக்கில் தோட்டச் செய்கைகளில் ஈடுபட்டனர்.

1970 ஆம் ஆண்டில் கலாநிதி என்.எம். பெரேரா கொண்டு வந்த வரவு செலவுத் திட்டத்தில் உப உணவுப் பொருள்களின் இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதனால் செத்தல் மிளகாய், வெங்காயம் மற்றும் அத்தியவசிய உபஉணவுப் பொருள்களுக்கு நாட்டில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

வடபகுதி இளைஞர்கள் உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து நாட்டில் அவற்றுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை நீக்கியதுடன் அவர்களும் பொருளாதாரத்தில் வளம் பெற்றனர்.

1977 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசு, வர்த்தக அமைச்சராக பதவி வகித்த அத்துலத்முதலி மூலம் உபஉணவுப் பொருள்களின் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்கியது. மிளகாய், வெங்காயம் மற்றும் உபஉணவுப் பொருட்கள் பெருமளவில் இந்தியாவிலிருந்தும் மற்றும் நாடுகளிலிருந்தும் நாட்டுக்குள் வந்து குவிந்தன.

வட பகுதி இளைஞர்களின் உபஉணவு உற்பத்தியில் மண் விழுந்தது.

இதேசமயம், சிங்களம் மட்டும் சட்டத்திலிருந்து தரப்படுத்தலால் ஏற்பட்ட பாதிப்பு, 1972 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட குடியரசு யாப்பில் தமிழரின் பாதுகாப்புக்குரிய அம்சம் நீக்கப்பட்டமை, தமிழ் மக்களுக்கெதிரான பாரபட்சம், தமிழ் இளைஞர்களின் விவசாய உற்பத்திக்கெதிரான நடவடிக்கை ஆகியவைகளை எதிர்த்து இலங்கைத் தமிழரசுக்கட்சியும், தமிழ் இளைஞர்களும், மாணவர்களும் சாத்வீகப் போராட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தினர்.

இந்தப் போராட்டங்களில் ஈடுபட்ட இளைஞர்கள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு சுற்றி வளைக்கப்பட்டனர். சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பலரும் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாகினர்.

இதேசமயம் நாடு முழுவதும் தமிழ் மக்களுக்கெதிரான இனவெறித் தாக்குதல்கள் காலத்துக்குக் காலம் தூண்டிவிடப்பட்டு தமிழர்கள் உயிர்ப்பலி எடுக்கப்பட்டதுடன் அவர்களின் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.

தமிழ் இனத்தை இந்த நாட்டிலிருந்து அழித்து ஒழிப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகள் ஆட்சியதிகாரத்துக்கு வந்தவர்களாலும், பேரினவாதிகளாலும் மேற்கொள்ளப்படுவது தெளிவாகத் தெரிந்தது.

ஜனநாயகரீதியில் தமது உரிமைகளையும் பாதுகாப்பையும், காப்பாற்ற முடியாதென்பதை தமிழ் மக்களும் தமிழ் இளைஞர்களும் அறிந்தனர்.

சாத்வீகப் போராட்டத்தினாலும் தம்மையும் தமிழ் மக்களையும் தமிழ் நிலத்தையும் பாதுகாக்க முடியாதென்பதையும் தமிழ் மக்களும், மக்களுக்கும் தமிழ் இளைஞர்களும் உணர்ந்துகொண்டனர்.

இதன் பின்னர்தான் வேறு வழியின்றி தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர். தமது பாதுகாப்பிற்கும், அச்சுறுத்தலாக வந்த ஆயுதப் படைகளையும் இனவெறியர்களையும் எதிர்த்துப் போராடினர்.

இந்தப் போராட்டத்துக்கு எதிராகவும் அற்பசலுகைகளுக்காகவும் அரசுடனும், அரசபடைகளுடனும் சேர்ந்து துணைபுரிந்து போராட்டத்தைக் காட்டிக் கொடுக்க முனைந்தவர்கள் சிலரையும் இவர்கள் எதிர்த்துப் போராடினர் சிலரை ஒழித்துக் கட்டினர். தமிழ்த் துரோகிகள் என்று கருதப்பட்டவர்களை மட்டுமல்ல சந்தேகிக்கப்பட்டவர்களையும், சந்தேகிக்கப்படாதவர்கள் சிலரும் கூட ஒழித்துக்கட்டப்பட்டனர். இதில் ஆயுதமேந்திய சகல இயக்கங்களும், சிறிது காலமே தோன்றி மறைந்த இயக்கங்களும் கூட இதில் ஈடுபட்டன.

இப்பொழுது எல்லாக் கொலைகளுக்கும் முழுப்பழியையும் எல்லோருமே விடுதலைப்புலிகள் மீதே சுமத்தித் தப்பித்துக்கொள்ளப் பார்கின்றார்கள். பட்டாசு வெடிக்காதவர்கள்கூட தங்களை ஈழப் போராளிகளாகக் காட்டிக்கொண்டு தங்கள் சுயலாபத்திற்காகக் கொலைகளிலும் கொள்ளைகளிலும் ஈடுபட்டதைத் தமிழ் மக்கள் பலரும் அறிவர்.

இன்று எங்கே, யார் கொலை செய்யப்பட்டாலும் உடனடியாகவே புலிகள் தான் அந்தக் கொலையைச் செய்தவர்கள் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் சில ஆங்கில, சிங்களத் தினசரிகள் கொட்டை எழுத்துக்களிலே வெளியிடுகின்றன.

கொலை செய்கிறார்கள், ஆட்களைக் கடத்துகின்றார்கள், சிறுபிள்ளைகளைக் கடத்துகின்றார்கள் என்று தினமும் ஒரு செய்தி அல்லது கடிதம் அல்லது ஒரு கட்டுரை என்று விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பிரசுரம் செய்யாமல் சில சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் வெளிவருவதில்லை என்று உறுதியாகச் சொல்லலாம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்று அதிகமாகப் பேசப்படும் இந்தக் காலத்தில் விடுதலைப் புலிகளையும் தேசியத்தலைவர் பிரபாகரனையும் கொலைகாரனாக முத்திரை குத்தி விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாக உலகுக்கு எடுத்துக் காட்டுவதில் ஜே.வி.பியும் அது போன்ற இன வெறி அரசியல் கட்சிகளும் பேரினவாத ஊடகங்களும் பந்தயம் பிடித்துக் செயல்பட்டு வருகின்றன.

1958 ஆம் ஆண்டு பாணந்துறைக் கந்தசுவாமி கோயிலில் கோயில் ஐயர் உயிருடன் எரியூட்டப்பட்டதிலிருந்து இனக்கலகங்களில் பாதுகாப்பான வெலிக்கடைச் சிறையிலும்கூட பயங்கரமாகத் தொடர்ச்சியாக இரு தினங்கள் 52பேர் கொல்லப்பட்டது வரையிலும், பின்னர் நவாலித் தேவாலயத்தில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்த சிறுவர் முதல் பெரியோர் வரை ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்றும், நாகர் கோயிலில் பள்ளிப் பிள்ளைகள், கிழக்கே சத்துருக் கொண்டான், கொக்கட்டிச் சோலை கிழக்குப் பல்கலைக்கழக வளாகம், நற்பிட்டி முனை என்று தொடர்ந்து திருகோணமலையில் கடற்தொழிலுக்குச் சென்றவர்கள், அன்பு வழிபுரம் படுகொலை, என்றும் பண்டாரவளையில் பிந்துனுவெவ சிறுவர் பராமரிப்பு நிலையப் படுகொலைகள் என்று பல கொலைகளில் தமிழ் மக்கள் கும்பல், கும்பலாகவும் கொல்லப்பட்டனர்.

இதன் பின்னரும் பிரபாகரனும் விடுதலைப் புலிகளும் ஆயுதம் ஏந்தியிருக்காவிட்டால் இலங்கையில் தமிழினம் முற்றாக அழிக்கப்பட்டிருக்கும்.

இது சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் தெரிந்தும் எழுத முன்வரமாட்டா இந்த ஊடகங்கள் தானே இன்று தலைவர் பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் கொலைகாரர்களாகவும் கொலை வெறியர்களாகவும் தினமும் சித்தரித்துப் பிரசாரம் செய்து கொண்டிருக்கின்றன.

கடந்த 27-10-2004 ஆம் திகதி புதன்கிழமை 'டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில்

சம்பிக்க லியனாராச்சி என்பவர் எழுதிய கட்டுரை, ஒன்று ஆசிரியர் தலையங்கம் வெளிவரும் பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

"தனக்குப்பின் ஒருவரில்லாமலே கசப்பான முடிவை எதிர்பார்க்கும் பிரபாகரன்"

என்ற தலைப்பில் இந்தக் கட்டுரை வெளிவந்திருக்கிறது.

1989 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இந்திய இராணுவம் வடக்கு - கிழக்கிலிருந்த சமயத்தில் பிரபாகரனுக்கும் மாத்தயா தரப்பினருக்கும் நடந்த சூட்டுச் சம்பவத்தில் பிரபாகரன் கொல்லப்பட்டதாக ஜூலை 24 ஆம் திகதி வெளிவந்த 'இந்து' பத்திரிகையில் வெளிவந்த செய்தியைக் குறிப்பிட்டு சம்பிக்க லியனாராச்சி என்பவர் இந்தக் கட்டுரையை எழுதியிருந்தார்.

வெகு விமரிசையாக ஏற்பாடு செய்யப்படும் - இன்னும் ஒரு மாதத்தில் வரவிருக்கும் தனது ஐம்பதாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்கு அநேகமாகப் பிரபாகரன் இருப்பார் என்று கூறும் கட்டுரையாளர், அவர் அமைதியான இயற்கை முடிவைக்காண்பது நிச்சயமில்லை என்று கருதுகிறார்.

இதற்கிடையில் 1980 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலிருந்து இந்திய உளவுத்துறையின் பகுப்பாய்வுப் பிரிவான றோ, பிரபாகரனைக் குறிவைத்திருந்ததாகவும் இதுவரை அதை அவர்களால் நிறைவேற்ற முடியாதிருப்பதாகவும் சம்பிக்க எழுதுகிறார்.

பிரபாகரனுக்கு முடிவு கட்டுவதில் கருணா தீர்க்கமாக இருப்பதாகவும் ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ போன்ற கட்சிகளின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் கருணாவின் ஆட்களுடன் இதில் இணைந்திருப்பதாகவும் சம்பிக்க எழுதுகிறார்.

தலைவர் பிரபாகரனும் விடுதலைப்புலிகளும் தமிழனை அழிப்பதைத்தடுத்து எதிர்த்துப் போரிடுவது, சம்பிக்க லியனாராச்சி போன்ற சிங்கள இனவெறியர்களுக்கு அவர்கள் மீது ஆத்திரத்தை ஏற்படுத்தியிருப்பதில் ஆச்சரியமில்லை.

ஆனால் இந்தச் சிங்கள இனவெறியர்களுக்கு ஆதரவாகத் தமிழரென நாமமது கொண்டியங்கும் சில தமிழர்கள் பின்னால் "வாலாட்டிக்கொண்டு" ஆதரவாகவும் உடந்தையாகவும் இருப்பதுதான் தமிழ் மக்களால் புரிந்துகொள்ள முடியாமலிருக்கிறது.

இவர்களுக்கு வரலாறு நல்ல பாடம் படிப்பிக்கும் என்பது உறுதி.

# இந்திய 'அஸ்த்ரா' ஏவுகணை அடுத்த வருடம் ஜூனில் பரிசோதனை

(பெங்களூர்)

விமானத்திலிருந்து பறந்து விமானங்களைத் தாக்கும் 'அஸ்த்ரா' ஏவுகணையை இந்தியா அடுத்த வருடம் ஜூன் மாதம் பரிசோதிக்கவுள்ளது. ஏவுகணைத் தொழில்நுட்பம் குறித்து ஹைதராபாத்தில் உள்ள இந்திய இராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டுச் சோதனைச்சாலை இயக்குநர் பிரகலாதா கூறியதாவது -

இந்திய போர் விமானங்களான மிராஜ் - 2000 மற்றும் சுகோய் ஆகியவற்றில் பொருத்தி எதிரியின் விமானங்களைத் தாக்கும் வகையில் ஏவுகணைகளை உருவாக்க ஆராய்ச்சிகள் நடந்தன. அதன் பயனாக உருவாக்கப்பட்ட 'அஸ்த்ரா' ஏவுகணை அடுத்த வருடம் ஜூன் மாதம் பரிசோதிக்கப்படும். விண்ணில் சீறிப்பாய்ந்து 80 கிலோமீற்றர் தூரத்திலுள்ள இலக்கையும் தாக்கவல்லதாக இது இருக்கும்.

திரிசூல் ரக ஏவுகணைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிறு தொழில் நுட்பக் கோளாறு சரிசெய்யப்பட்டு விட்டது. மாற்றியமைக்கப்பட்ட திரிசூல் ரக ஏவுகணை பரிசோதனைகளும் இந்த வருடத்தில் நடத்தப்படும் என அவா தெரிவித்தார்.

# யாசீர் அரபாத்துக்கு ஏற்பட்ட நோயினால் அவரது உயிருக்கு அச்சுறுத்தலில்லை!

பலஸ்தீனத் தலைவர் அரபாத்திற்கு ஏற்பட்டுள்ள நோய் அவரது உயிருக்கு எவ்விதத்திலும் ஆபத்தில்லையெனவும், குணப்படுத்தக் கூடியதெனவும் அரபாத்தின் சிரேஷ்ட உதவியாளரான நபில் அபு, ரொய்டர் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

அரபாத்திற்கு ஏற்பட்டுள்ள நோய எத்தகையது என்பதனைக் கண்டறிய அவரது மூளை, உடல் மற்றும் இரத்தம் என்பன வைத்தியர்களால் பரிசோதிக்கப்பட்டு வருகின்றது.



இறுதியாக நடந்த மருத்துவப் பரிசோதனையின் மூலம் அவரது உயிருக்கு எவ்விதத்திலும் பாதிப்பில்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவரது உதவியாளர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் பலஸ்தீன அதிகாரசபையின் நிறைவேற்றுக்குழு முதன்முறையாக அரபாத் இல்லாமல் ரமலா மாளிகையிற் கூடியது.

இந்த நிறைவேற்றுக்குழுக் கூட்டத்திற்கு பலஸ்தீன முன்னாள் பிரதமர் மஃமூட் அபாஸ் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார்.

இந்த வாராந்தக் கூட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த அபாஸ், பலஸ்தீன நடவடிக்கைகள் யாவும் வழமை போன்றே இடம்பெற்று வருவதாகவும், இப்பொழுதும் நாம் அதிபர் அரபாத்திடமிருந்து தகவல்களைப் பெற்று வருவதாகவும், அவரே தற்போதும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மேற்குக்கரை நகரான ஜெனின் பகுதியில் இஸ்ரேல் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 12 வயது நிரம்பிய பலஸ்தீன சிறுவன் கொல்லப்பட்டதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தலை துண்டிக்கப்பட்ட நிலையில்

# ஜப்பான் பிரஜையின் சடலம் பலூஜா நகரிலிருந்து மீட்பு!



(பாக்தாத்)

தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஈராக்கில் கண்டெடுக்கப்பட்ட ஆணின் சடலம் ஈராக்கில் வைத்து கடத்தப்பட்ட ஜப்பான் பிரஜையான சோசி கோடாவினது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை - சோசி கோடாவைக் கடத்திய கிளர்ச்சிவாதிகள், இவரைக் கடத்திய நேரத்திலிருந்து 48 மணி நேரத்திற்குள் ஈராக்கிலுள்ள ஜப்பான் படையினர் அனைவரும் வெளியேற வேண்டுமென காலக்கெடு விதித்திருந்தனர்.

ஆனால், இவர்களின் காலக்கெடுவினை ஜப்பான் அரசாங்கம் ஏற்காத காரணத்தால், இவர் கடந்த வெள்ளிக்கிழமை தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையிற் கண்டுபிடிக்கப்பட்டார்.

இவரது உடல் கிளர்ச்சிவாதிகளின் பகுதியெனக் கருதப்படும் பாக்தாத்தின் ஒரு பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாக ஜப்பான் வெளியுறவு அமைச்சர் நொபுராகா மசிமூரா நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக் மக்களின் நன்மை கருதி தமது படைகள் தொடர்ந்தும் ஈராக்கில் நிலைகொண்டிருக்குமெனவும், தீவிரவாதிகளுக்கெதிராகத் தொடர்ந்தும் உறுதியாகப் போராடுமெனவும் ஜப்பான் பிரதமர் கொய்சுமி ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

ஈராக்கின் சமரா நகர்ப்பகுதியில் நிலை கொண்டுள்ள 550 துருப்புக்களையும் ஜப்பான் வெளியேற்ற மறுத்ததுடன், அவர்கள் தொடர்ந்தும் மனிதநேயப் பணிகளில் ஈடுபடுவர் எனவும் தெரிவித்துள்ளது.

இந்தப் படுகொலைச் சம்பவம் ஜப்பான் பிரதமர் கொய்சுமிக்கு எதிர்கட்சிகளினால் நெருக்கடியை ஏற்படுத்துமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவத்தையடுத்து ஈராககிலுள்ள ஜப்பான் படையினர் அனைவரையும் உடனடியாக நாட்டிற்கு மீள அழைக்குமாறு ஜப்பான் எதிர்க்கட்சித் தலைவர் கற்சுயா ஒக்காடா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை அல் - அராபிய தொலைக்காட்சியில், கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்ட சூடான் மொழிபெயர்ப்பாளரான நூர்த்தீன் சகாரியா என்பவர் வீடியோ ஒளிப்பதிவு மூலம் காட்டப்பட்டார்.

இவர் அந்த வீடியோ நாடாவில் தன்னைத்தானே அறிமுகம் செய்ததுடன், தான் மொழிபெயர்ப்பாளராக இருந்த அமெரிக்க அதிகாரியான நிற்றான்கோப் என்பவரை ஈராக்கிலிருந்து வெளியேறுமாறு கோரிக்கை



விடுத்தார்.

இதனைவிட, கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்ட போலந்து பிரஜை அல ஜசீரா தொலைக்காட்சியில் காட்டப்பட்டார்.

இவரை விடுதலை செய்ய வேண்டுமெனில் ஈராக்கில் நிலைகொண்டுள்ள போலந்துப் படையினர் வெளியேற வேண்டுமெனவும் கிளர்ச்சிவாதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஆனால் ஈராக்கில் நிலைகொண்டுள்ள 2500 போலந்து துருப்பினரையும் உடனடியாக வெளியேற்ற முடியாதென அந்த நாடு அறிவித்துள்ளது.

இதேவேளை, ஈராக்கில் உதவிப் பணிகளில் ஈடுபட்ட பிரிட்டன் மற்றும் ஈராக், நாடுகளின் பிரஜாவுரிமை பெற்ற பெண்ணான மார்கிரட் ஹசன் தொடர்பான எவ்வித தகவலும் இதுவரை வெளிவரவில்லை.

# சவூதி அரேபியா செல்வதை தவிர்க்குமாறு அமெரிக்கப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தல்!

தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக சவூதி அரேபியா செல்ல வேண்டாம் என தனது பிரஜைகளுக்கு அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை செய்துள்ளது.

அதேபோல் சவூதி அரேபியாவில் தங்கியுள்ள அமெரிக்கப் பிரஜைகளையும் உடனடியாக நாடு திரும்புமாறு அமெரிக்க வெளியுறவு அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

சவூதி அரேபியாவிலுள்ள அமெரிக்கப் பிரஜைகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக உளவுத்துறைக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

அமெரிக்கர்களைத் துன்புறுத்துதல், காயம் ஏற்படுத்தல், கடத்திக் கொலைசெய்தல் ஆகிய செயல்களில் தீவிரவாதிகள் ஈடுபடுவர்.

எனவே, அங்கு தங்கியுள்ள அமெரிக்க பிரஜைகள் உடனடியாக நாடு திரும்பவேண்டும். அல்லது ஹோட்டல்கள் மற்றும் குடியிருப்புகளில் தங்காமல் பாதுகாப்பு இடங்களில் வசிக்குமாறு எச்சரிக்கை செய்துள்ளது.

# பென் குயின் பறவைகளுக்கு சிறப்பு மையம் அமைப்பு!



(சிட்னி)

அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் பென்குயின் பறவைகளுக்கு என்று தனி மையம் அமைத்துள்ளனர்.

பென்குயின் பறவைகளுக்கு ஏற்ற சூழ்நிலையில் செயற்கை பனிக் கண்டங்கள், செயற்கை கடல் மற்றும் சோலைகளையும் அமைத்துள்ளனர்.

பென்குயின் பறவைகள் இனப்பெருக்கம் செய்யவும் இங்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மையத்தின் ஊழியர் ஒருவர் பென்குயின் பறவைக்கு உணவு ஊட்டும் காட்சி.




# த ரைம்ஸ் ஆங்கில நாளிதழ் இன்றுமுதல் அளவு மாற்றம்

(லண்டன்)

லண்டனிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கில நாளிதழ் த ரைம்ஸ் இன்று முதல் கைக்கு அடக்கமாக வெளிவருகிறது.

பிரிட்டனில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் ஒவ்வொன்றாக பெரிய அளவில் இருந்து கைக்கு அடக்கமான அளவுக்கு மாறி வருகின்றன.

அதேபோல், த ரைம்ஸ் பத்திரிகையையும் வெளியிட வேண்டும் என்று அதன் வாசகர்கள் நீண்ட நாட்களாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இன்று முதல் த ரைம்ஸ் பத்திரிகை சிறிய அளவில் வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கில நாளிதழ் த ரைம்ஸ் 216 ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

இந்த நாளிதழ் பாரம்பரிய முறையை விடுத்து நீள - அகலங்கள் குறைக்கப்பட்டு, கையடக்கமாக இன்று முதல் வெளிவருகிறது.

ரூபர்ட் முர்டோக் செய்திக் குழுமத்திலிருந்து வெளிவரும் த ரைம்ஸ சரிந்து வரும் விற்பனையை தூக்கி நிறுத்த இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த புதிய முடிவு 11 மாதங்களுக்கு முன்பே எடுக்கப்பட்டு விட்டது.

கைக்கு அடக்கமாக மற்றொரு பிரபல நாளிதழான இண்டி பெண்டன்ட் கடந்த 2003 ஆம் ஆண்டில் கைக்கு அடக்கமாக மாறிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

த ரைம்ஸ் பத்திரிகை வடிவம் மாற்றப்பட்டுள்ளதால், அதன் ஊழியர்கள் யாரும் பணி நீக்கம் செய்யப்படமாட்டார்கள் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க தேர்தல் தினத்தன்று

# அல் கொய்டாவின் தாக்குதல் நடைபெற வாய்ப்பில்லையாம்

## அமெரிக்க உள்துறை பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு



நாளை இடம்பெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின்போது, அமெரிக்கா மீது பின்லேடனின் அல் கொய்டா அமைப்பு தாக்குதல் நடத்துவதற்கான புலனாய்வு ஆதாரங்கள் எவையும் இல்லையென அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புச் செயலர் ரொம் றிஜ் தெரிவித்தார்.

தேர்தற தினத்தன்று பாதுகாப்பை உஷார் நிலையில் வைத்திருக்க வேண்டிய தேவை இல்லையெனத் தெரிவித்துள்ள ரொம் றிஜ் - ஒசாமா பின்லேடனால் அமெரிக்காவிற்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஆனால், பின்லேடனால் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையானது - தேர்தற் தினத்தன்று பாதுகாப்பை மிகவும் உஷார் நிலையில் வைத்திருக்கவேண்டிய வேண்டிய நிலைக்கு அமெரிக்க அரசாங்கத்தைத் தள்ளியுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், எமது மக்கள் தேர்தற் தினத்தன்று தாம் எவ்வித அச்சுறுத்தலுமின்றி பாதுகாப்பாக வாக்களிக்கின்றோம் என உணர்வதற்கான சூழ்நிலையை நாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ள ரொம் றிஜ் - தேர்தற் தினத்தன்று வாக்களிப்பு நிலையங்களுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

ஆனால், சாதாரணமாக தேர்தல் நிலையங்களிற்கு வழங்கப்படுகின்ற பதுகாப்பே வழங்கப்படுவதாகவும் பின்லேடனின் அச்சுறுத்தல் காரணமாக வாக்களிப்பு நிலயங்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட மாட்டாது எனவும் தெரிவித்தார்.

உலகிலே அமெரிக்காவின் பாதுகாப்பு நடவடிக்கைகளே பலம் வாயநதன என்றும் இதனால் பின்லேடனது மிரட்டல் குறித்து அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லையென்றும் ரொம் தெரிவித்தார்.



இதேசமயம், அமெரிக்க மக்கள் தாம் யாருக்கு வாக்களிப்பது என்பது பற்றி நிதானமாகச் சிந்திக்க வேண்டியுள்ளதாகவும், அமெரிக்கர்கள் தாம் அளிக்கும் தவறான வாக்குகள் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்குத் தூண்டிவிடுமோ என அச்சம் அடைந்துள்ளதாகவும் வொஷிங்ரனில் உள்ள பி.பி.சி செய்தியாளர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முஸ்லிம் சமூகத்தை மதுவுக்கு விற்பவர்கள் நாங்களல்லர்!

## ஹக்கீமுக்கு மாற்றுக் குழு பதிலடி

'பக்காடியா' மதுவிற்[...]கா அல்லது மாதுவிற்கோ முஸ்லிம் சமூகத்தை விற்பவர்கள் தாங்கள் அல்ல என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் மாற்றுக் குழு ரவூப் ஹக்கீமுக்குப் பதிலடி கொடுத்துள்ளது.

மாற்றுக்குழுவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் அமைச்சர் பதவியை ஏற்[...]ருப்பது அரசு போட்ட எச்சில் எலும்பு என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வெளியிட்ட கருத்திற்கு மாற்றுக் குழுவைச் சேர்ந்த அமைச்சர் அமீர் அலி இந்த பதிலடியைக் கொடுத்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசிய கட்சியின் கட்டளைப்படி செய[...]ற்படுவதால், அந்தக்கட்சியிலிருந்து மீள முடியாதிருக்கின்றது. சி[...]யோனிகளின் சதிவலைக்குள் சி[...]க்கியுள்ளது. சர்வதேச சதிகாரர்களின் வலையில் சிக்கியுள்ள எம் மக்களையும் எம்மையும் காப்பாற்றுவதற்காகவே அந்தக்கட்சியில் மாற்றுக் குழுவாக நாங்கள் செயற்பட தீர்மானித்துள்ளோம்.

அமைச்சர் பதவியை ரவூப் ஹக்கீம் தலைமையில் ஏற்றுக் கொண்டால் அது காய் நகர்த்தல், அவரை மீறி வேறுயாராவது எற்றுக் கொண்டால் எலும்புத் துண்டு என அவர் விமர்சிப்பது புதிய விடயமல்ல. அது அவரது வழமையான பாணி.

நேற்று வரை இந்த எச்சில் எலும்புத் துண்டுகளுக்கு அலைந்தவர்கள், அரசியல் காய் நகர்த்தலில் தோல்வியடைந்து,

தற்போது சீ...சீ... இந்த எட்டாத பழம் புளிக்கு மென கொட்டாவி விடுவது வேடிக்கையானது என்றும், அமைச்சர் அமீர் அலி தனது பதிலில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி சந்திரிகாவின் சதிகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் துணைபோகாது!

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவியையும் ஆட்சியையும் நீடிப்பதற்காக கையாளும் எந்தவொரு சதி நடவடிக்கைகளுக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்க மாட்டாதென அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றி சிறுபான்மை இன மக்களுக்கு இருக்கும் அரசியல் அந்தஸ்தை முழுமையாக இல்லாமல் செய்து பலவீனப்படுத்த ஜனாதிபதி தயாராகி வருகின்றார்.

அதற்கான அடித்தளம்தான் எமது கட்சியைச் சேர்ந்த 3 நாடாளுமன்ற உறுப்பினர்களை பின் கதவால் இழுத்து எடுத்துள்ளார்.

அவருடைய இந்த நாடகததுக்கும், அதன் நடிகர்களுக்கும் முஸ்லிம் மக்கள் காலம் வரும்போது தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

இதற்கு முன்னோடியாக விரைவில் போராட்டங்களையும் முன்னெடுப்பார்கள் என்றும் ரவூப் ஹக்கீம் இதுபற்றி மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதித்...

பிரதி எவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவான ஊடகமொன்றுக்குச் சென்றது தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்தப் பத்திரிகைக்கு குறிப்பிட்ட அமைச்சரவை அறிக்கையை சமர்ப்பித்தமைக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டுமெனத் தெரிவித்துள்ள அவர், ஜனாதிபதி பொறுப்பற்ற விதத்தில் தமது அமைச்சுத் தொடர்பாக கருத்துத் தெரிவித்து வருகின்றமையானது, இரண்டு கட்சிகளுக்குமிடையிலான இடைவெளியை அதிகரிக்கக் கூடுமெனத் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி.யுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறும் செயல்கள் தொடருகின்றமையானது ஆரோக்கியமானதல்ல என்றும் அவர் தெரிவித துள்ளார்.

## ஈராக்கில்...

டொறின் ரீற்றா இராசரத்தினம் தமது கணவர் கடத்தப்பட்ட செய்தியைத் தொலைக்காட்சி செய்தி மூலம் அறிந்துகொண்ட பின்பு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சாரதியான இராசரத்தினமும், பங்களாதேஷைச் சேர்ந்த சாரதி ஒருவரும் கடந்த வாரம் ஈராக்கிய கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்டிருந்தனர்.

அண்மைக்காலத்தில் வெளிநாட்டுப் பணயக் கைதிகளுக்கு ஈராக்கில் நிகழ்ந்த கதி தமது கணவருக்கு நடக்கக்கூடாதென்று திருமதி இராசரத்தினம் பிரார்த்தனை செய்துவருகிறார்.

## காத்தான் குடி...

நிர்மாணிக்கப்பட்டு வரும் பள்ளிவாசல் சேதமாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்ட போதிலும் தீ பரவாமல் தடுக்கப்பட்டது.

அகில இலங்கை இஸ்லாமிய மெஞ்ஞான பேரவையின் 2 மத்தரசாக்கள் முற்றாகத் தீப்பற்றி எரிந்துள்ளன.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பிரதேசத்தில் உருவாகியுள்ள பதற்றநிலை காரணமாக அனைத்துப் பள்ளி வாசல்களுக்கும் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கலகம் அடக்கும் பொலிஸார் அப் பிரதேசத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, இராணுவத்தினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

## தமிழர் பிரச்சினையில்...

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழர்களின் பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இல்லாமலேயே தீர்வு காணப்படக்கூடியது.

இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தையை அவர் தனது அமைப்பைப் பலப்படுத்துவதற்காகவே பயன்படுத்துகிறார் எனத் தெரிவித்தார்.

அத்துடன் தற்போதைய காங்கிரஸ் அரசாங்கம் இலங்கையுடன் இணைந்து விடுதலைப் புலிகளின் தலைவரை நாடுகடத்துவதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும் என டக்ளஸ் தேவானந்தாவும், சந்திரகாசனும் இந்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டனர்.

இலங்கை பற்றிதான இந்தியாவின் கொள்கை என்ற இந்த மாநாட்டில் மூன்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இலங்கையில் சிறுபான்மைத் தமிழ்ச் சமூகத்தின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்பதை நிராகரித்தல்.

அத்துடன், இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறுவதாக இருந்தால் அது சகல கட்சிகளும் இணைந்ததாகவே இருக்க வேண்டும் என சர்வதேச சமூகம் உறுதிப்படுத்தவேண்டும்.

இலங்கையில் எவ்வகையான தீர்வு முயற்சிகள் காணப்பட்டாலும் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதை இந்தியா கண்டிப்பாக மறக்கக்கூடாது என்பது முதலாவதாகும்.

இரண்டாவது தீர்மானத்தில் சர்வதேச சமூகம் குறிப்பாக இந்தியா இலங்கையில் சமஷ்டி அரசியலமைப்பு ஒன்று நடைமுறைப்படுத்தப் படுவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு உதவிசெய்யவேண்டும்.

இவ்வாறு இந்த சமஷ்டி அரசியல் அமைப்பு நடைமுறைப்படுத்தப் படுவதை எந்த ஒரு குழுவும் குழப்புமாக இருந்தால் அது பயங்கரவாத அமைப்பாகவே கருதப்படும். இந்தக் குழுவை ஐ.நாவின் பயங்கரவாதத்துக்கெதிரான தண்டனையைக் கொண்டு சர்வதேச சமூகம் தண்டிக்கவேண்டும்.

மூன்றாவது தீர்மானத்தில் இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களது சொந்த இடம் அனுப்புவதற்கான சகல ஏற்பாடுகளையும் இந்தியாவே மேற்கொள்வதுடன் அவர்களது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான புனர்வாழ்வுப் பணிகளையும் இந்தியாவே செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட டி.ஆர்.கார்த்திகேயன் உரையாற்றுகையில் -

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இந்தியா தலையிடும்போது பிரபாகரனை நாடு கடத்தவேண்டுமென முன்நிபந்தனை விதிக்கக்கூடாதெனவும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கப்பால், கடந்த தசாப்தகாலமாக உள்ள தமிழரின் பிரச்சினையைப் பார்க்கவேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய இந்து பத்திரிகை ஆசிரியர் ராம் -

இந்திய, இலங்கை உறவின் தமிழர்களின் தொடர்பானது வலுவானதாகும். எனவே இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தையில் இந்தியா தலையிடுவதென்பது அது இந்தப் பிரச்சினையில் எவ்வகையான நிலைப்பாட்டில் உள்ளதென்பதை முதலில் உண்மையாகவே சோதித்துக்கொள்ளவேண்டும்.

கொள்கைகள் என்பது சாத்தியமான வகையில் மாறிக்கொண்டேயிருக்கும் எனத் தெரிவித்தார்.

இலங்கையின் விவகாரத்தில் இந்தியா கலாசாரம், அரசியல் மற்றும் பொருளாதாரம் போன்ற விடயங்களில் நீண்ட காலமாக விசேட ஆர்வத்தைக் கொண்டுள்ளதென இந்தியாவின் முன்னாள் பிரதமர் சந்திரசேகர் இந்த மாநாட்டுக்கு அனுப்பியுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

## அடுத்த இரண்டு...

பலம்வாய்ந்த கூட்டு பாதுகாப்புப பயிற்சி நடவடிக்கைகள், இராணுவப் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளுதல், கடலோர ரோந்து, கூட்டு இராணுவ ஒத்திகை, பாதுகாப்புத் தளபாட விநியோகம், இருதரப்பு இராணுவ மட்டக் கலந்துரையாடல்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்தவாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தலைமையிலான முப்படைத் தளபதிகள் அடங்கிய குழுவினர் - இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ரஞ்சித் இசாருடன் சைச்சாத்திடப்படவுள்ள கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இந்தப் பாதுகாப்புக்கூட்டு ஒப்பந்தமானது இந்திய இராணுவத் தொழில்நுட்பங்களை இலங்கை இராணுவத்தினர் பெற்றுக்கொள்வதற்கு சுலபமாக வழிசமைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒஸ்லோ பிரகடனம்...

சின் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம் ஆகியோருடன் சமாதான செயலகத்தின் முன்னாள் பணிப்பாளர் பேணாட் குணதிலகவும் -

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அவரது மனைவி அடேல் பாலசிங்கம், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், கலாநிதி ஜோய் மகேஸ்வரன், வி. உருத்திரகுமார் ஆகியோரும் -

நோர்வே தரப்பில் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஆகியோரும் கலந்துகொண்டனர் எனத் தெரிவித்தார்.

இதேவேளை - ஒஸ்லோ பிரகடனம் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்ட விடயம் ஏதும் இல்லையென விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - 'தனது போரும் சமாதானமும்' என்ற நூலில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

UNIT

இந்தியாவில் கணனிப் பொறியியல் துறைப் பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு தசாப்த காலமாக கணனியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் இந்நிறுவனத்தை நிறுவியுள்ளோம். கணனி துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி உதிரிப்பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவையுடன் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு 3வருட முழு உத்தரவாதத்துடன் வழங்குகின்றோம்.

விலை குறைவு என்பதற்காக தரம் குறைந்தவையல்ல தரம் மிகமிக உயர்ந்தவை

Attractive Opening Offer
each computer purchase has
★ Computer Table
★ Filter ★ Dust Cover ★ Mouse Pad & etc.

எல்லாமே Hybrid Boost, Hypher Thread, Dual Monitor வசதிகளுடன்

இவையெல்லாம் இலவச வீட்டில் சேர்த்தல் மற்றும் வீட்டிலேயே பராமரிப்புடன் கூடியவை

We are entirely different from others

எமது சேவைகள் பல அவற்றுள் சில :

விற்பனை

- உலகத்தரம் வாய்ந்த பிரத்தியேக உதிரிப்பாகங்களை தெரிவு செய்து இணைத்து முழுக் கணனியாகவும் மற்றும் உதிரிகளாகவும் வழங்குதல்.
- கணனி தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களான Compaq, DELL, IBM மற்றும் HP நிறுவனங்களில் தயாரிப்புக்களை மிகமிகக் குறைந்த விலையில் தரம் மாறாமல் வழங்குதல்.
- உலகத்தரம் மற்றும் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களான Perx & Asrock தயாரிப்புக்களின் ஏக விநியோகம்
- வலைப்பின்னலமைப்பில் முன்னணி நிறுவனமான Cisco தயாரிப்புகள் மற்றும்

3 வருட முழு உத்தரவாதம்

விசேட சலுகைப் பொதிகள்

- புதிய Multimedia Pentium IV கணனிகள் Rs. 40,000/= முதல் மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
- புதிய Multimedia Compaq Pentium III கணனிகள் Rs. 25,000/= முதல் ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
- புதிய Multimedia Compaq Pentium II கணனிகள் Rs. 13,000/= முதல் ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

நிபந்தனைக்குட்பட்டது. இச்சலுகை 3, 4 & 5 திகதிகள் மட்டுமே

Universal Network of Information Technology
347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.